விலை ரூபா 1-00

# உதயசூரியன்
UTHAYASURIYAN

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1 | திருவள்ளுவராண்டு 2011 | 1-5-81 | வெள்ளிக்கிழமை | ஒளி 31

ஆர்த்திடும் யந்திரக் கூட்
-டங்களே உங்கள்
ஆதிஅந்தம்சொல்லவோ?
-நீங்கள்
ஊர்த்தொழிலாளர்
உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்ல
-வோ?

- பாரதிதாசன் -

## நாடு குலுங்க நடைபெறும்

# உழைக்கும் வர்க்கத்தின் ஒப்பற்ற திருவிழா!

## யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மக்கள் கடல் திரளுகிறது!

உள்ளம் மகிழ்ச்சியால் துள்ள- உலகெங்கும் வாழும் உழைக்கும் வர்க்கம் ஒன்று சேர்ந்து கொண்டாடும் நாள்- முதலாளி வர்க்கம் முனகல் ஒலி எழுப்ப- மூட்டை சுமக்கும் ஏழை எளிய சாமான்யர்கள் முரசொலி முழக்கிடும் நாள்- பன்னீரில் குளிப் போர் பதறித் துடிக்க கண்ணீரில் குளிப்போர் புரட்சிக் காவியம் பாடிடும் நாள்- மேன்மைமிகு மே நாள்!

இந்நாள்- சிங்கள ஏகாதிபத்திய யு. என். பி. ஆட்சிக்கு ஒரு கரிநாள்- தொழிலாளர் வர்க்கத்தைக் குழி தோண்டிப் புதைக்க முற்பட்டுள்ள ஜனாதிபதி ஜே. ஆருக்கு புதியபாடம் புகட்டுவோம் என உழைத்துழைத்து ஓடாகிப்போனோர் போர்க் கொடி தூக்கிடும் எழுச்சி நாள்!

எரியும் நெருப்பாய் சுவாலிக்கும் இந்த உணர்வை எட்டுத்திக்கும் எதிரொலித்திட- அந்நிய சிங்கள ஆட்சியின் கீழ் தமிழினம் அணு அணுவாய்ச் சித்திரவதைப்படுவதை உலகம் அறிய உரத்துக் கூறிட- சமதர்ம தமிழீழத்திலேயே தமிழினம் பாதுகாப்பாக வாழமுடியும் என்ற நமது இலட்சிய கீதத்தை முழக்கிட தமிழர் விடுதலைக் கூட்டணியோடு இணைந்து தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணி இவ்வாண்டு மேதினத்தை யாழ்நகரில் சீரோடும் சிறப்போடும்கொண்டாடுகின்றது.

இவ்விழாவில், தமிழ்ப்பிரதேசங்களைப் பாதுகாக்கவும், தமிழர் [illegible] பூர்த்தி செய்யவும் கூடிய மாவட்டசபைத் தேர்தலில் நமது இயக்கமாம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில்போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் அறிமுகம் செய்துவைக்கப்படுவர்.

தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணித் தலைவர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் பா. உ. அவர்கள் தலைமையில்

(8-ம் பக்கம் பார்க்க)

## இதுதான் பொத்துவில்

பொத்துவில் பஸ் நிலையம் 14 வருடங்களுக்கு முன்பு இருந்த நிலையிலேயே கிடங்கும் மண்திட்டியாகவும் காட்சி அளிக்கிறது. பஸ் நிலயத்துக்கான வசதி எதுவும் இல்லை. பெண்கள் குறிப்பாக இளம் பெண்கள் இயற்கைக்கடன் கழிக்க எதுவித வசதியுமில்லாமல் மிகக் கஸ்டப்பட வேண்டியுளது. நேரக்கட்டுப்பாட்டாளருக்கு ஒருகுடிலுமில்லை. அதுமட்டுமா ஆஸ்பத்திரி 25 சதுர அடியுடைய அறையில் 6 கட்டில் போடப்பட்டுள்ளது. இரண்டு கட்டடம் 12 கட்டில். எல்ல நோயாளிகளும் பணியே கிடக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.

## திருமலையில் தமிழர் புறக்கணிப்பு

திருக்கோணமலை மாவட்ட சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி தனது வேட்பாளர் பட்டியலில் தமிழருக்கு கடைசி இடத்தையே கொடுத்துள்ளது.


தமிழர் பெரும்பான்மையாக வாழும் இம்மாவட்டத்தில் சிங்களவருக்கு இரண்டாம் இடம் கொடுக்கப்பட்டுள்ளதிலிருந்து, தமிழர்களை ஐக்கிய தேசியக் கட்சி ஒதுக்கித் தள்ளுகின்றது என்பது தெளிவாகின்றது

# அடிமை விலங்கொடிக்க ஆர்த்தெழுக!

## மேதின விழாவையொட்டி த. தொ. ச. கூட்டணித் தலைவர் பண்டிதர் கா. பொ. விடுத்த செய்தி!

சிங்கள ஏகாதிபத்திய அரசு தொழிலாளர்களையும் அவர்களின் சங்கங்களையும் சர்வாதிகார முறையில் அடக்கி ஒடுக்கி உரிமைகளைப் பறித்துள்ள சூழ்நிலையில் இந்த ஆண்டு மேநாள் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்து பட்டினிபோட்டு வாட்டி வருத்துகின்ற இந்தக் கொடிய ஆட்சிக்கு அடிபணிய



மாட்டோம் என்பதை எடுத்துக்காட்ட இந்த மேநாள் நல்ல வாய்ப்பைத் தருகின்றது.

அடிமைப்படுத்தப்பட்ட தமிழ் இனத்தின் தொழிலாளர்கள் மீது பொறிக்கப்பட்ட சிங்களமொழித் தேர்ச்சி எனும் அடிமைச் சின்னத்தை துடைத்து அழிக்கச் செய்யப்பட்ட முயற்சிகள் எவ்வித நல்ல பலனையும் தரவில்லை. எனவே தமிழ்த் தொழிலாளர்கள் இந்த மேநாளில் எவ்வித அடக்குமுறைகளையும் சூழ்ச்சிகளையும் எதிர்த்து தங்கள் அடிமைச்சினத்தை அழிப்பதற்கு திரண்டு பொங்கி எழல் வேண்டும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## யு. என். பி பரீத்தை எதிர்த்து அவரது தம்பி போட்டி?

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் மட்டக்களப்பு 2வது ஐ. தே. க. எம். பி. ஜனுப் பரீத்மிரா லெவ்வையின் சகோதரரான ஜனுப் ரசாக் தலைமையிலான ஒரு சுயேச்சைக்குழுவும் போட்டியிடுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகவே அபிவிருத்திச் சபைத் தேர்தலில் ஜனுப் ரசாக் குதித்துள்ளாராயினும் அவரது அரசியல் பிரவேசம் ஜனுப் பரீத்மிராலெவ்வைக் கெதிரானதாகவே பொதுமக்கள் மத்தியில் கருதப்படுகின்றது.

## தமிழைச் சரியாகப் படிக்காத தமிழ்ப்பத்திரிகை ஆசிரியர் யார்?

அடுத்த வாரம் 'உதயசூரியனில்' ஆவலோடு எதிர்பாருங்கள்.

## மாவட்ட சபை அமைப்பு மாநில சுயாட்சியை வழங்கும்

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சாதாரணமானவையல்ல. அவை அந்தந்த மாநிலங்களின் சுயாட்சிகளை நிர்ணயிக்கும் சபைகள். குறிப்பாகக் கூறினால், ஒரு மத்திய அரசின் கீழ் 24 மாவட்ட சபைகள் இயங்கி அந்தந்த மாவட்டங்களின் தேவைகளைச் சுலபமாக தீர்த்துவைக்கும் வல்லமை கொண்டவையாகும்.

—ஜனாதிபதி. ஜே. ஆர்

## தமிழ் ஈழம் தமிழர் தாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டசபைத் தேர்தல் களத்தில் நமது பாசறை மறவர்கள்!

### திருகோணமலை

திரு. அ. தங்கத்துரை,
60, இராசவரோதயம் வீதி,
திருகோணமலை.

ஜனப். மு. அ.கா.மகுறூப்,
மத்திய வீதி, மூதூர் 4

திரு. இ. ஞானகணேசன்,
பிரதான வீதி, மூதூர்.

### மட்டக்களப்பு

திரு. சி. சம்பந்தமூர்த்தி,
செங்கலடி.

திரு. கந்தையா சீவரெத்-தினம்,
களுவாஞ்சிக்குடி.

திரு. கு. சௌந்தரராசா,
மட்டக்களப்பு.

திரு. வே. தம்பிராசா,
அரசடித்தீவு.

### அம்பாறை

திரு. ஆறுமுகம் கந்தையா,
(வேல்முருகு ஆசிரியர்)
பாண்டிருப்பு.

திரு. லீ. சிவஞானச் செல்வ குருக்கள்,
ஆலையடி வேம்பு.

திரு. வெ.சுப்பையாபிள்ளை,
வலத்தபட்டி

திரு. சி. கதிர்காமத்தம்பி,
வீரமுனை.

திரு. க. சிந்தாத்துரை,
தம்பிலுவில்.

திரு. இ. மதனகோபாலன்,
கல்முனை.

### வவுனியா

திரு. மு. சிற்றம்பலம்,
குடியிருப்பு, வவுனியா.

திரு. வை. சிற்றம்பலம்,
நெளுக்குளம், வவுனியா.

ஜனப். நாகூர் ஹனியமால்-தீன்,
பாவற்குளம்.

திரு. மா. சின்னத்தம்பி,
பெரியவிளாத்து குளம்.

திரு. இராயப்பு தோமாஸ்,
சின்னக்குளம்.

திரு. வி. தெய்வேந்திரன்,
பரந்தன், புளியங்குளம்.

### முல்லைத்தீவு

திரு. செ. மரியநாயகம்,
முல்லைத்தீவு.

திரு. கா. தம்பாப்பிள்ளை,
புதுக்குடியிருப்பு,

திரு. ஜே. பீ. சேவியர்,
(ஜெயசீலன்) மாங்குளம்.

திரு. வ. தர்மலிங்கம்,
முள்ளியவளை.

திரு. ஆ. குலசேகரம்,
துணுக்காய்

திரு. க. தேவராசா,
முள்ளியவளை.

### மன்னார்

திரு. பி. எம். செபமாலை,
அடம்பன்.

திரு. வே. கைலாசபிள்ளை,
இலுப்பைக்கடவை.

திரு. அல்ஹாஜ் மீராசாய்பு மரைக்காயர் முகமது அப்துல் காதர்,
எருக்கலம்பிட்டி.

திரு. செபமாலை மொத்தம்-போல்,
நறுவிலக்குளம்.

திரு. பி. சிந்தாத்துரை,
மன்னார்.

திரு. மனுவேல் டானியல்-ரூேச்
பள்ளிமுனை, மன்னார்.

### யாழ்ப்பாணம்

திரு. சு. நடராசா,
காங்கேசன்துறை.

திரு. சி. நாகராசா,
நல்லூர்.

திரு. ந.இராஜேந்திரம்,
கோப்பாய்.

திரு. மு. தம்பிமுத்து,
பருத்தித்துறை.

திரு. ஏ. நடராசா,
மானிப்பாய்.

திரு. வே. க. சோமசுந்தரம்
ஊர்காவற்றுறை.

திரு. ஜி. எஸ். அழகையா,
யாழ்ப்பாணம்.

திரு. க. சின்னத்துரை,
கோப்பாய்.

திரு. க. நடேசு,
வட்டுக்கோட்டை

திரு. ச. பூபாலசிங்கம்,
வட்டுக்கோட்டை.

திரு. இ. கிருஷ்ணராசா,
கிளிநொச்சி.

ஜனப் சுல்தான் முகைதீன்,
யாழ்ப்பாணம்.

திரு. ந. பாஸ்கரன்,
உடுப்பிட்டி.

திரு. சி. நவரத்தினம்,
சாவகச்சேரி.

## தமிழன்பர்கட்கு ஓர் வேண்டுகோள்

சிங்கள ஏகாதிபத்திய அரசாங்கம் தனது அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ள தமிழ் மொழி உரிமைகளைத்தானும் வழங்காமல் தமிழ்மொழியைப் புறக்கணித்தும் சிங்கள மொழியைத் திணித்தும் வருகின்றது. தமிழ் மக்களுக்கு நாடோறும் தனிச் சிங்களக் கடிதங்களும் தனிச்சிங்களச் சுற்றறிக்கைகள் அழைப்புக்கள் அறிவித்தல்கள் பற்றுச்சீட்டுக்கள் முதலியனவும் அனுப்பப்படுகின்றன.

இவற்றையெல்லாம்சேர்த்து ஒரு காட்சியை நடத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்தச் சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ்மொழி உரிமைகளை ஏட்டுச் சுரைக்காயாக்கியுள்ளதை மக்கள்மனத்திலே நன்கு பதிய வைத்தற்கு இந்தக் கண்காட்சி பெரிதும் உதவும்.

எனவே இந்தக் கண்காட்சியிலே வைப்பதற்குத் தமிழ்மக்கள் தங்களுக்கு அரசாங்கம் அனுப்பிய தனிச்சிங்களக் கடிதங்கள் முதலியவற்றைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி உதவுக:

ஆசிரியர்,
'உதயசூரியன்',
238, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

# ஆடும் நாடகத்தை நிறுத்தினால் அனைவருக்கும் நல்லது!

சுதந்திரன் 22-4-81 இதழில் ''வைகுந்தவாசன் மீது ஏன் இந்த வசைமாரி'' என்ற தலைப்பில் ''திருவாதவூரான்'' பெயர் பூண்ட ஆசிரியர் எழுதியதைப் படித்துப்பார்த்தேன். ''எதிர் வாதங்களை நான் முன்வைக்கவில்லை'' ''பழையதைக் கிளறிப் பார்வைக்குவைப்பது எந்த அடிப்படையில் நியாயம்'' என்று சமரசம் பேசிய அவர், பழையதைக் கிளறித் தானேபக்கத்தை நிரப்பியிருக்கிறார்; இது மட்டுமா சிலரைச்சாடியும் வசைமாரி பொழிந்தும் எழுதித் தள்ளியிருக்கிறார். (சுதந்திரன் 22-4-81)

திரு. வி. நவரத்தினம் போன்றவர்களைச் சுதந்திரன் தானே தூற்றியது. திரு. நவரத்தினத்தை 'ஆபிஸ்பையன்' போர்வைக்குள் புகுந்து சுதந்திரன் தூற்றியதையும் இதற்கிடையில் சுதந்திரன் ஆசிரியர் மறந்துவிட்டாரா?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்ததலைவர்களுள் ஒருவரும் கூட்டணியின் பொருளாளருமான அமரர் கதிரவேற்பிள்ளையை மையமாகக் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான பிரசாரங்களிலும் தூற்றல்களிலும் சுதந்திரன் மும்முரமாக ஈடுபட்டு நாடகம் ஆடியது.

அவர் அமரரான பின்னரும் தமது மனச்சாட்சிக்கு மாறாக அவர் நடந்தார் என்று பல வாரங்களுக்கு முன் அரசாங்க ஏடொன்றில் வெளிவந்த செய்தியை எடுத்துச் சுதந்திரன் முற்பக்கத்தில் வெளியிட்டுப் பகிரங்கப்படுத்தி உறுதிப்படுத்தி, அமரர் கதிரவேற்பிள்ளைக்குக் களங்கத்தை உண்டாக்கியது.

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

**''ஆதிரையான்''**

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

இப்பொழுது டாக்டர் தருமலிங்கத்தைக் கூட்டணியுடன் மோதவிட்டுப் புது நாடகத்தைத் தொடங்கியுள்ளது. சுடர்க்கரிகாலன் அடிஎடுத்துக் கொடுக்க இந்த நாடகம் தொடங்கி இரண்டாம் களத்தை அடைந்துள்ளது.

சுதந்திரன் ஆசிரியர் கோவைமகேசனின் அயரா முயற்சியால் உருவாக்கப்பட்ட தமிழ் ஈழ அணியின் தலைமைச் செயற்குழுவில் கோவைமகேசனுடன் சேர்ந்துசெயற்படுபவர் டாக்டர் தருமலிங்கம் (வீரகேசரி 31-3-81) இந்த அணியின் தலைமைப்பதவியை அலங்கரிப்பவர் டாக்டர் தருமலிங்கம். அவர் தமிழர் விடுதலைக்கூட்டணியில் உறுப்பினர்அல்ல.

கறள்பிடித்துக் கூர்மழுங்கிய பேனுக்கத்தியால் பெரிய கருங்காலி மரத்தை வெட்டமுயல்பவர்களைப்போலச் சுதந்திரன் எழுதியவாறு டாக்டர் தருமலிங்கம் வளர்த்துவைத்த ''நெடுமரத்தை'' அவரையும் தன்னுடன் சேர்த்து கொண்டு வெட்டிச்சரிக்க முற்படும் கோவைமகேசனின் தமிழ் ஈழ அணியைச்சேர்ந்திருக்கும் டாக்டர் தருமலிங்கத்துக்கும் (வீரகேசரி 31-3-81) அது எதிரணியாக்கியுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் இப்பொழுது எவ்வித தொடர்புமில்லை. டாக்டர் தருமலிங்கம் தமிழ் ஈழ அணியின் தலைவரேயன்றிக் கூட்டணியின் சாதாரண உறுப்பினருமல்ல.

எனவே, டாக்டர் தருமலிங்கத்தை மையமாகவைத்து ஆடும் நாடகத்தை உடனே நிறுத்திவிடுமாறு சுதந்திரனைக் கேட்டுக்கொள்கின்றோம். இது டாக்டர் தருமலிங்கம் உட்பட எல்லோருக்கும் நல்லது.

''உடனிருந்து ஒத்துழைக்க முடியாவிட்டாலும் உபத்திரவம் கொடுக்காது ஒதுங்கியிருப்பது அவசியம்; முடிந்தால் உற்சாகமூட்டுவது உத்தமம். (சுதந்திரன் 22-4-81) என்று சுதந்திரன் உபதேசித்திருப்பதைச்சுதந்திரனே கைக்கொண்டால் மோதல்களும் வசைமாரிகளும் தூற்றல்களும் நின்றுவிடுமே.

**'சுடர்' ஆசிரியருக்கு திரு. கா. பொ. இரத்தினம் பா.உ. 15-4-81 இல் எழுதிய கடிதம்**

திரு. கரிகாலன் அவர்கள்,
ஆசிரியர் 'சுடர்'
கொழும்பு.

அன்புடையீர்,

உங்களுடைய சுடர் 6, ஒளி 12 ஆம் இதழில் (பங்குனி 1980) 6 ஆம் பக்கத்தில் பின்வரும் கேள்வி காணப்படுகிறது.

''கே: டாக்டர் தர்மலிங்கம் தமக்குப் பதவி ஏதும் கொடுக்கவில்லை என்ற கோபத்தில் கூட்டணிக்கு எதிராகச் செயற்படுவதாக தீவுப்பகுதி எம். பி. கா, பொ. இரத்தினம் கூறியுள்ளாரே?''

அவர் எங்கு? எப்பொழுது? யாருக்குக் கூறியுள்ளார்? என்பதை அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நன்றி.

அன்பன்,
கா. பொ. இரத்தினம்:
பா. உ.

பிரதி: மருத்துவ கலாநிதி எஸ். ஏ. தர்மலிங்கம் அவர்கள்
(மறுமொழி கிடைத்தபின் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்)

## அறவழிப் போராட்டக் குழு அரசுக்கு வேண்டுகோள்!

வடபகுதியில் நிலவுகின்ற இந்து ஆலயங்களில் சமத்துவ வழிபாட்டின்மையை நீக்குவதற்கு சமூகக்குறைபாடுகள் சட்டத்தை வலுவுள்ளதாக்க வேண்டும் என்ற கோரிக்கையை அறவழிப்போராட்டக் குழு அரசுக்கு மகஜர்மூலம் சமர்ப்பிக்கவுள்ளது

இம்மகஜரில் அண்மைக் காலத்தில் தாம் சமத்துவ வழிபாடு தொடர்பாக எடுத்த நடவடிக்கைகள் பற்றியும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சமூகக்குறைபாடுகள் தொடர்பான சட்டத்தினை வலுவுள்ளதாக்கக் கோரியும், சமத்துவ வழிபாடு தொடர்பாக அரசு போதிய அக்கறை காட்டவில்லை என்பதனைத் தெரிவிக்கும் பொருட்டு யாழ் அரசாங்கச் செயலகத்தின்முன் தெரிவு செய்யப்பட்ட அறவழிப் போராட்டக்குழு உறுப்பினர்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளனர்.

## குமாரகுலசிங்கம் கைது

கொலை, கொள்ளை சம்பந்தமாக இளவாலையைச் சேர்ந்த குமாரகுலசிங்கம் என்பவரை சந்தேகத்தின் மீது பொலிசார் கைது செய்துள்ளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள ஆதிக்க வெறியருக்கு

நயினாதீவைச் சிங்கள ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவருவதற்கு அங்குள்ள புத்த பிக்கு எடுத்துவரும் முயற்சிகளுக்கு எதிராக அவ்வூர் மக்களையும், முழுத்தமிழினத்தையும் அணிதிரட்டும் வகையில், ''சிங்கள ஆதிக்க வெறியருக்கு அபாய அறிவிப்பு'' என்ற இக் கட்டுரை, துண்டுப்பிரசுர வடிவில் அச்சிடப்பட்டு, 1979-ம் ஆண்டு மே மாத முற்பகுதியில் விநியோகிக்கப்பட்டது. இது தொடர்பாக, நயினாதீவு வடக்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையின் செயலாளர் திரு. நா. சிவராசசிங்கமும், ஷி கிளைச் செயற்குழு உறுப்பினர் திரு. ச. ஜெகதீசனும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இவர்களுக்கும், அச்சக உரிமையாளர் திரு. யேசுதாசன், திரு. சி. செல்வரத்தினம் ஆகியோருக்கும் எதிராக பொலிஸார் தாக்கல் செய்திருந்த வழக்கு, ''மேற்படி துண்டுப் பிரசுரம் சட்டபூர்வமானது'' என்ற சட்டமா அதிபரின் விதிப்புக் காரணமாகப் பின்னர் கைவிடப்பட்டு, எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்குக் காரணமாகச் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த எழுதுவினைஞரான திரு. சிவராசசிங்கம் இம்மாதம் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார். மேற்படி துண்டுப் பிரசுரங்களில் பெரும்பகுதி, மருதானைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுத் திருப்பிக்கொடுக்கப்படாது போனதால், போதியளவு மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தப்படாத காரணத்தால், அதனை இங்கு மறுபிரசுரம் செய்துள்ளோம். — ஆசிரியர்

1939 ம் ஆண்டில் ஒரு புத்த பிக்கு வெறுங்கையுடன் நயினாதீவுக்கு வந்து பிச்சையெடுத்துச் சீவித்துவந்தார். இதுவே பௌத்தமதம் நயினாதீவுடன்கொண்ட முதலாவது ஆதாரபூர்வமான தொடர்பு. இதன்முன்பு இங்கு பௌத்த விகாரமோ, அல்லது அந்த மதத்துடன் தொடர்புடைய வேறு சின்னங்களோ இருந்ததற்கு எவ்வித சான்றுகளும் எங்குமே கிடையாது. 1939ல் பிச்சைக்காரராக வந்துசேர்ந்த பிக்கு, மிகவும் ரகசியமான முறையில் ஒரு காணியை இங்கு வாங்கி ஓலைக்குடிசை ஒன்றில் பௌத்த விகாரை ஒன்றை ஆரம்பித்தார். இது பழைய கதை.

நயினாதீவின் ஏட்டில் ஒரு பாகத்துக்குச் சமமான பரப்பளவு கொண்ட காணிகள் இன்று இங்கு புத்தபிக்குகள் கட்டுப்பாட்டில் உள்ளன. பட்டணத்தில் வசிக்க ஆசைப்பட்ட பலர் புத்தபிக்குவுக்குக் காணிகளை விற்றுவிட்டுக் குடிபெயர்ந்துள்ளனர். ஒன்றல்ல, இரண்டு புத்தவிகாரங்கள், பௌத்த யாத்திரீகர்க்கான மடங்கள், தலைமைப்பிக்குவுக்கு சகல நவீன வசதிகளும் அமைந்த வாசஸ்தலம் முதலியன இன்று அரசாங்க உதவியுடனும் பௌத்த யாத்திரீகர் நன்கொடையிலும் எழுந்துள்ளன. இது இன்றைய நிலை.

நயினாதீவில் ஒரு ஏக்கர் வரையில் அரசாங்கநிலம் யாத்திரீகர் மடம் அமைப்பதற்கென புத்தபிக்குவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலம் தமிழனின் சொந்த நிலம், சிறுபான்மைத் தமிழரின் உறுதிக்காணிகளாகிய இவற்றைச் சாதி வெறிபிடித்த அந்நாள் உடையார்மார்கள் எல்லை பிடுங்கி எறிந்து முடிக்குரிய நிலமாக ஆக்கினர். ஆயின் அந்தோ, இன்று இந்நிலம் சிங்கள ஆட்சியாளரால் புத்தபிக்குவுக்கு வழங்கப்பட்டுவிட்டது. யாத்திரீகர் மடம் அமைக்கும் நோக்கத்திற்காக அரசாங்கம் இந்நிலத்தைபிக்குவுக்கு வழங்கியிருப்பினும் அங்கு ஏற்கனவே ஓலைக் கொட்டில் ஒன்றில் தேனீர்க் கடை ஒன்று சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வியாப்பாரம் நடந்து வருகின்றது. அத்துடன் தற்சமயம் ஆறு கடைகளுக்கு ஏற்ற கடைக் கட்டிடம் ஒன்றைப் பிக்கு அமைத்து முடித்து, கடந்த 26-4-79ல் யாழ்ப்பாண அரசாங்க அதிபரை அழைத்துத் திறப்புவிழாவும் நடத்தியுள்ளார். இக்கட்டிடத்தினில் சில சிங்களவர்களும், சிங்கள

வருக்கு விசுவாசமுள்ள அடிமைத்தமிழர் சிலரும் கடைகளை விரைவில் திறக்கக் கூடுமெனப் பேசப்படுகின்றது.

இந்த விழாவில் பிக்கு உரையாற்றியபோது காரைநகர் கடற்படைத்தளத்தை நிறுவியமைக்காக டீ. எஸ். சேனநாயக்காவுக்கு நன்றி கூறினார். (1958 கலவர சமயம் இதே கடற்படைத் தளத்தைச் சேர்ந்த கடற்படையினரே நயினாதீவில் பல வீடுகளையும் கடைகளையும் எரித்தும் கொள்ளையிட்டும், பல ஊரவரை அடித்து நொருக்கியும் அட்டூழியம் புரிந்தனர்) இந்த விழாவில் பேசிய இரண்டு நயினாதீவினரில் ஒருவராகிய வே. சிவப்பிரகாசம் என்பவர் நயினாதீவில் 'புத்தர் திடல்' 'புத்தபள்ளம்' என்ற பெயரில் காணிகள் இருப்பதால் பௌத்த மதத்துடன் இத்தீவு தொன்மையான தொடர்புடையது எனக்கூறி புத்த பிக்குவைக்குளிரப்பண்ணினர்.

சொந்த ஊருக்கு இடமாற்றம் பெற்றுத் தந்தமைக்காக புத்தபிக்குவுக்கு செஞ்சோற்றுக் கடன் தீர்க்க அவர் அவ்விதம் கூறியிருக்கக் கூடும். நயினாதீவில் இப்போது ''சிவபெருமான்'' என்ற பட்டப்பெயரை உடைய ஒருவர் வாழ்கின்றார். இன்னும் பல்லாண்டு வாழ்ந்து அன்னார் மறைந்த பின்பு அவர்வாழ்ந்த காணியை ''சிவபெருமான் வளவு'' என மக்கள் கூறக் கூடும். நமது சிவப்பிரகாசம் போன்ற அதி தீவிர மூளைசாலிகள் அப்போது நயினாதீவில் வாழ்ந்தால் பரமசிவனாகிய சிவபெருமானே உமாதேவியாரோடும் வந்து ''சிவபெருமான் வளவில்'' குடி

## ஒரு சிவப்பு விளக்கு!

யிருந்துவிட்டுப் போனதாகவும் பேசக்கூடும். (சிங்களவியர் என்ற பட்டப்பெயர் கொண்ட ஒரு தமிழரும் இங்கு வாழ்ந்ததுண்டு)

நயினாதீவுக்கும் பௌத்த சமயத்துக்கும் எக் காலத்திலும் எவ்வித தொடர்பும் இருந்ததில்லை. மகாவம்சம் என்ற நூலில் சூலோதரன், மகோதரன் எனும் இரண்டு நாக அரசர்கள் இரத்தினக்கல் சிம்மாசனம் ஒன்று சம்பந்தமாகச் செய்த சண்டையைச் சமாதானம் செய்யப் புத்தர் நாகதீபத்துக்குச் சென்றதாகக் கூறப்பட்டுள்ளது. இதே போன்றதொரு கட்டுக்கதை மணிமேகலையிலும் உண்டு. மணிமேகலை சம்பவம் நடந்த இடத்தை மணிபல்லவம் எனக் குறிப்பிடுகின்றது. இந்த நாகதீபமும், மணி பல்லவமும் நயினாதீவே என்பதற்கு எவ்வித சான்றுமில்லை என்பது ஒருபுறமிருக்க, சிங்களவரான டாக்டர் எஸ். பரணவிதான என்ற பேர் பெற்ற தொல் பொருளாராய்ச்சி நிபுணரே, இந்தக் கதைகள் எதுவித வரலாற்று அடிப்படையும் இல்லாதவை எனக்கூறியுள்ளார் ஆக நமது கிராமத்தில் எதுவித தார்மீக உரிமையுமற்றவர்கள். இங்கு வந்து நமது பிச்சைச்சோற்றில் வாழ்ந்து நம்மவர் சிலர் ஆதரவில் விகாரை எழுப்பிப், பின்பு விகாரைக்கு வரும் யாத்திரிகர்தேவைக்கு மடம்கட்டக் காணி பெற்று, இன்று அந்தக் காணிகளில் கடைகள் அமைத்து வியாபாரம் துவக்கவும் துணிந்துள்ளனர். எல்லா மக்களினதும் மத வழிபாட்டு உரிமைகளையும் நாம் மதிக்கின்றோம். அதனால்தான் பொது மக்கள் உபயோகத்திற்கு விடப்பட்ட அரசாங்க நிலத்தில் பௌத்த கொடிகளை சீமெந்தில் அமைத்ததற்கு நாம் எதிர்ப்புக்காட்டவில்லை. நாகபூசணி அம்மன் கோவிலிலிருந்து கால் மைல் தூரத்துக்குள் ஒன்றல்ல, இரண்டு விகாரைகளை அமைத்ததைக் கூட எதிர்க்கவில்லை, (பாலத்தேவைக்கு கடலினுள் உள்ள பாறைக்கற்களை உடைத்து புத்தபிக்கு கடலரிப்பு அபாயத்தை உண்டுபண்ணியதை எதிர்த்தது வேறு விடயம்) ஆனால் நமது இந்தப் பண்பை பலவீனம் என்று நினைத்துப் புத்தகுரு செயற்படுகிறார், நயினாதீவு வடக்கு கிராமமுன்னேற்றச் சங்கம் அதற்குரிய நிலத்தில் அமைந்திருந்த வழித்துணை வைரவசுவாமி கோவிலைப் புனர் நிர்மாணம் செய்ய முற்பட்டதை எதிர்த்துப் புத்தபிக்கு அரசாங்க அதிபரின் தலையீட்டைக் கோரினார். இன்று அதே புத்தகுரு யாத்திரிகர் மடம் அமைக்க வழங்கப்பட்ட அரசாங்கக் காணிக்குள் கடைகள் அமைக்க முற்படுகின்றார். நயினாதீவு தமிழரின் பெருமைக்குரிய சொத்து. இது படிப்படியாக நமது கையிலிருந்து நழுவிச் செல்ல விடுவோமா? எதிர்கால சந்ததிகள் நமது கல்லறைகளில் காறித் துப்பும் கேவல நிலைக்கு ஆளாவோமா? நயினாதீவு வடக்கு கிராமமுன்னேற்றச் சங்கம், பிக்குவின் சட்ட விரோதச் செயலை எதிர்த்து தனது வன்மையான ஆட்சேபத்தை ஏற்கனவே அரசாங்க அதிபருக்குத் தெரியப்படுத்தியுள்ளது. மௌனம் சாதிக்கும் அரசாங்க அதிபரைத் தலையிடக் கோருவோம். அவசியப்பட்டால், அகிம்சை வழியில், நேரடி நடவடிக்கையிலும் ஈடுபடுவோம், 'எங்கள் தமிழ் மண்ணில், இராவணனார் பொன் மணணால, அங்குலமும் இனி நாங்கள் அயல் வெறியர் ஆளவிடோம்' என்ற தமிழ் ஈழ அரசவைக் கவிஞன் காசி ஆனந்தனின் சொல்லைச் செயலாக்குவோம். ✻

# இன ஒற்றுமையைக் குலைக்க சதி நடைபெறுகின்றது!

— உடுப்பிட்டி பா. உ.

'ஒற்றுமையீனத்தால் பலவற்றை இழக்கவேண்டிய சந்தர்ப்பம் இங்கு மட்டுமல்ல தமிழ்நாட்டிலும் இருந்திருக்கிறது. தமிழ் மக்களுடைய விடுதலை உணர்வு உச்சக் கட்டத்தை அடைந்து அதனை அறுவடை செய்கின்ற காலத்தில் பல சோதனைகள் வந்து ஒற்றுமையீனமான சூழ்நிலை ஏற்பட்டது.

இவ்வாறு கரவெட்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் உடுப்பிட்டி பா. உ. திரு. த. இராசலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்,

கூட்டணி ஒரு விடுதலை அணி. கூட்டணியின் அமைப்பு முறை, இலட்சிய நோக்கம் இவற்றைப் பார்க்கும் போது தமிழ்த்தலைவர்கள் 25 ஆண்டு அனுபவத்துடன் ஒற்றுமையுடன் 1975ஆம் ஆண்டு எடுத்த முடிவினால் 1977இல் எதிர்க்கட்சித் தலைமைப் பதவியைக் கைப்பற்ற முடிந்தது. 1977 ஆம்ஆண்டுக்கு முன்னும் பின்னும் தமிழ்மக்களின் அரசியல் நிலைமையைப் பார்க்கும் போது கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்மக்களின் பிரச்சனைகள் சர்வதேச ரீதியில் பரவியுள்ளன. தமிழ்மக்களின் ஒற்றுமையினால்தான் பிரச்சனை சர்வதேசரீதியில் உயர்ந்தது. இந்த ஒற்றுமையைக் குலைக்க இன்று பல சக்திகள் முனைந்து வருகின்றன.

விடுதலை இயக்கத்திற்குரிய இலட்சியம் நிறைவேற தகுந்த தலைமை வேண்டும். இது கூட்டணிக்கு இருக்கிறது. கூட்டணி இயக்கத்தின் நடவடிக்கை, தீவிரம் ஆகியன போதாது என்று தலைவர்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்யப்படுகிறது. இது தலைமைக்கு இடைஞ்சலை உண்டு பண்ணுகிறது. விடுதலை கோரும் இனம் இதனைப் பார்த்துக்கொண்டிராது இளைஞர்களிடையே இருக்கும் சந்தேகத்தை நீக்க நடவடிக்கையெடுக்க வேண்டும்'. என்றார்.

# பிரெஞ்சுப் பத்திரிகையாளர் பேரார்வம்!

வட பகுதியில், அண்மைக் காலமாகத் தங்கியிருக்கும் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பிரபல பட்திரிகையாளர் திரு. ஜீன்டுசப்னே பிரபல சட்டத்தரணி திரு. கிறிஸ்ரியன்ரோஸ் ரோச்சர் ஆகிய இருவரும் தமிழ்மக்களின் பிரச்சனைகள், பாரம்பரியம் ஆகியன பற்றிய விபரங்களைச் சேகரித்து வருகிறார்கள்.

இவர்கள் இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை உடுப்பிட்டித் தொகுதிக்கு விஜயஞ் செய்து திரு. த. இராசலிங்கம் பா. உ. வைச் சந்தித்துப் பல விபரங்களைச் சேகரித்துக்கொண்டனர். கரவெட்டி இராச கிராமத்திற்கு திரு. இராசலிங்கம் பா. உ. வுடன் விஜயஞ்செய்து அக்கிராமத்தைப் பார்வையிட்டு அங்கு வாழும் மக்களுடன் உரையாடி அவர்களது வாழ்க்கை முறையினையும் தெரிந்துகொண்டனர்.

''உதயசூரியன்''
சந்தா விபரம்

| | |
|---|---|
| **இலங்கை** | |
| ஒரு ஆண்டு | 60-00 |
| அரை ஆண்டு | 30-00 |
| **இந்தியா** | |
| ஒரு ஆண்டு | 260-00 |
| (இந்தியா தவிர்ந்த) வெளிநாடுகளுக்கான சந்தா | 25 அமெரிக்கன் டொலர்கள் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியர் பேசுகிறார்

# தேம்ஸ் நதி தீரத்திலே!

தேம்ஸ் நதி தீரத்திலே இருந்து வந்த செய்தி நமக்குத் தென்றலாகவே இனிக்கின்றது.

இனத்தின் விடுதலைக்காகப் போராடும் நமது இயக்கப்பாசறை ஒன்று அங்கே அமையவுள்ளது எனும் அச்செய்தி அமுதம் அன்றி வேறெதுவாக இருக்க முடியும்?

பாசறையில் இணைந்து பணியாற்ற எங்களையும் அனுமதியுங்கள் என்று பலர் லண்டன் சீமையிலிருந்து அனுப்பிய விண்ணப்பங்கள்- வேண்டுகோள்கள் தலைமைச் செயற்குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன.

தாய் இயக்கமாம் தமிழர்விடுதலைக்கூட்டணியின் கிளையாக- அங்கமாக இனிமேல் இந்தத் தமிழீழப் போராளிகளைக் கொண்ட பாடி வீடே வெள்ளையர் நாட்டின் தலைநகரில் நமது விடுதலைப் பேரிகையை விண்ணதிர முழங்கப் போகின்றது.

கொள்கை ஒன்றாக இருப்பினும்- பல குழுக்களாகப் பிரிந்து நம்மவர்கள் லண்டன்மாநகரில் பணியாற்றுவதினால் உருவான குழப்பம்- உட்பூசலுக்கு இதனால் ஒரு முற்றுப்புள்ளியே விழுந்து விட்டது.

தமிழீழ இலட்சியப்பணியே ஆற்றினும்- வெளிநாடுகளில் உள்ள ஒரு சில தமிழ் ஆர்வலர்கள்- தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக்கு செவி சாய்க்காது செயற்படுவதினால்- சர்வதேசரீதியில் நமது செல்வாக்கே சாய்ந்து விடலாம். இப்படியொரு சூழ்நிலையை நாம் என்றுமே அனுமதிக்க முடியாது.

1978ல் லண்டன் மாநகருக்குச் சென்றிருந்த தலைவர் அமிர் அப்போது அங்கிருந்த பதினாறு இயக்கங்களோடு தொடர்பு கொண்டு- பல மணி நேரத்தைச் செலவிட்டு- தமிழர் இணைப்புக்குழு ஒன்றை உருவாக்கினார். அதன் அமைப்பாளராக திரு. கிருஸ்ணா வைகுந்தவாசன் நியமிக்கப்பட்டார். ஆனால் நடந்தது என்ன?

இனவிடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்லுகின்றேன் எனச் சொல்லிக் கொண்டு- தன் புகழ்பாட அந்த மனிதர் 'தமிழீழப் பிரகடனம்' எனும் கச்சேரியைத் தாம் போகுமிடமெல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறார்.

தீயில் வீழ்ந்த காய்ந்த வைக்கோல் கணப்போதுள் தீய்ந்து சாம்பலாகி விடுவது போல- உணர்ச்சித் தீயால் உருக்குலைந்து போகும் சில மனிதர்கள்- கண்ணுக்கும் காதுக்கும் இனிய இந்தக் கச்சேரியில் தம்மைப்பறி கொடுத்தவர்களாய்-

'கிருஸ்ணா- முகுந்தா' என்று பாகவதர் பாணியில் பக்கப்பாட்டுப் பாடுகிறார்கள்; பரவசமடைகிறார்கள்!

இதனால்- மக்களிடையே ஏகப்பட்ட குழப்பம்- என்ன செய்வதென்று தெரியாமல் அவர்கள் விழிக்கின்றார்கள்!

'கச்சேரி' செய்கின்ற காரணத்தால் திரு. வைகுந்தவாசன் தமிழீழ விடுதலைக்காக எந்தக் காரியமும் செய்து விடவில்லையென்று நாம் சொல்லவில்லை!

ஐக்கிய நாட்டு சபைக்குள் நுழைந்து அவர் ஆற்றிய அரும்பணி இருக்கிறதே- அதனை அவ்வளவு சுலபத்திலா மறந்திட முடியும்?

நாடு புகழப் பெற்ற அந்த நற்பெயரை இவ்வளவு விரைவில் அவர் நாசமாக்கி விட்டாரே என்பது தான் நமது வருத்தம்!

அயல் நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் தங்கள் அன்னை நாட்டின் விலங்கொடிக்கச் செய்யும் அரிய பணிகளையெல்லாம் நாம் அறிவோம்!

இன விடுதலை பற்றியே சிந்தித்துச் செயல் புரியும் அந்தச் சுதந்திர தீபங்கள்- விடிய விடிய எரிந்து கொண்டேயிருக்கின்றன- அவற்றை நாம் வணங்குகிறோம்!

தேம்ஸ் நதி தீரத்தில் இருந்து வந்த இன்னொரு செய்தியும் நமக்குத் தேனாகவே இனிக்கின்றது.

தமிழர்களின் ஒரே ஒரு விடுதலை இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணி. அது எத்தனை தான் தவறுகள் இழைத்திடினும் அதனைக் கட்டிக் காப்பதுதான் நமது கடமையே தவிர இடித்து வீழ்த்துவதல்ல- என்று 'லண்டன் முரசு' ஆசிரியர் திரு. சதானந்தன் பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கும் அறிக்கையே அந்த இனிய செய்தி- இதயம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கின்றது!

சதானந்தனின் கடமையுணர்வு- கடுகளவும் தன்னலம் கலவாத இந்தப் பொறுப்புணர்வு- சர்வதேச நாடுகளிலெல்லாம் தமிழீழ விடுதலைப் பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழன்பர்கள் அனைவருக்கும் ஏற்பட வேண்டுமென்றே நாம்பெரிதும் விரும்புகின்றோம்.

ஒரே கொள்கை- ஒரே இயக்கம்- ஒரே தலைமை- இதுவே நமது ஒரே உணர்வாக- நிலைப்பாடாக இருக்க வேண்டும்.

இந்த உணர்வு மட்டும் நம் உள்ளத்தில் இறுகப் பதிந்து விடுமாயின்-

சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம்- அடக்குமுறை தூள் தூளாக்கப்படுமென்ற உண்மையை நாம் இந்த நேரத்தில் எல்லோரும் அறிய உரத்த குரலில் சொல்லி வைக்கின்றோம்.

# கதிரே! நாங்கள் கதற எங்கே சென்றாய்?

### அரு. கோபாலன்

அதிரவரும் கூற்றுவனும் அச்சங்கொண்டு நிற்க
அறிவாலே வெல்லுகின்ற தெளிவான பேச்சு
முதிராத இளந்தமிழால் மூவுலகும் அளந்து
முடிவுகளைக் காட்டுகின்ற சிந்தனையின் வீச்சு
புதிராகப் பலருக்குத் தெரிந்தாலும் தமிழர்
பொற்காலம் படைக்கின்ற இலட்சியத்தின் மூச்சு
கதிரவேற் பிள்ளையா? இல்லையில்லை! ஈழத்தின்
கதிரவனே நீயன்றோ? உதயமெங்கே போச்சு?

பிரிந்திருந்த தமிழோடை அனைத்தினையும் ஒன்றாய்ப்
பிணைத்துப் பேராய், தமிழர்கூட்டணியாய்
விரிந்துபாய வைத்திட்டார் தந்தை செல்வா! அதுவே
விடுதலைப்போர்ப் படையாக நடையிடவும் வைத்தார்!
செறிந்திருந்த பகைப்புலங்கள், சிங்களமண் புதர்கள்
சீறிவந்த இவ்வாற்றால் சிதைந்திடவும் கண்டோம்
பரந்துபாயும் இவ்வாற்றின் அடைகரையாய் வெள்ளம்
பாழாகா திலக்கடைய விளக்கமுற நின்றாய்!

நெறிப்படுத்த அடைகரையே! நிறைமிகுத்த அணையே!
நீர்ப்பாச்சும் வேளையிலே நீமறைந்த தேனோ?
அரிப்பெடுத்த கூற்றுவனே பூகம்ப மாக
அசைத்தானோ? உன்தேவை அறியாத மாந்தர்
பறித்தெடுக்க உட்கசிந்து கரைந்தனையோ? நாங்கள்
பரிதவிக்கத் திடீரென்று மறைந்ததென்ன நியாயம்?
சரிப்படுத்த முடியாத நட்டத்தில் இன்று
தமிழுலகம் புலம்பநீயும் பிரிந்த தநியாயம்!

மதுரையிலே முதன்முதலில் நான்உன்னைக் கண்டேன்
மறக்கவொண்ணாச் சிந்தனையின் நர்த்தனத்தைக்
கன்டேன்
குதிராத பொருளையெலாம் குதிரவைத்து என்னைக்
கூர்மிகுத்த அறிவமுதை அள்ளியள்ளி யுண்டேன்
எதுவரினும் தமிழீழம் எய்துவதுன் போன்றோர்
இருக்கையிலே தப்பாது என்றுறுதி கொண்டேன்
உதிரமெல்லாம் உறையுமாறு நீமறைந்தாய் என்ற
ஒருசேதி கேட்டின்று ஒதிபோல நின்றேன்!

தமிழீழத் தனிநாட்டின் வரலாற்றை யாத்த
தகுதிமிகு இராசரத்தினம் அன்றொருநாள் எங்கள்
தமிழகத்தில் சென்னையிலே அமரரானார்; நீயும்
தமிழீழப் பணிக்காகத் தில்லி செல்லும் வழியில்
தமிழகத்தில் சென்னையில்தான் உயி நீத்தாய் என்றால்
தமிழகமா? சாக்காடா? என்றன்றோ உலகம்
சிமிழ்த்தெண்ணும்? இந்நினைவை மாற்றுதற்கு நாங்கள்
செய்வதென்ன? ஐயகோ! கொடுமை மிகக்கொடுமை!

பெரியாரை, அண்ணாவை, காமராசர் தன்னைப்
பேரிழப்புக் காளக்கிப் பெருந்துயரைத் தந்த
கரியாத சென்னைநகர் மரணத்தீ உனையும்
கவ்வியதோ? தனிநாட்டுக் கொள்கையினை இங்கே
எரியாத அடுப்பாக, விளையாத பயிராய்,
இயங்காத பொறியாக ஆக்கிவைக்கும் குணம்தான்
பெரிதாக மிகவுண்டு! அதுவேதான் கொள்கை
பிறழாத தால்உன்னைப் பலிகொண்டு போச்சோ?

வளையாத தால்முறிந்த வரலாற்றுக் கல்தூண்
வடிவாக மிகவேண்டும் குனிந்து குனிந்ததனால்
இலையாகக் கொள்கையினைப் பலிகொடுப்போர் தான்தூண்
இலையாகச் செயல்வேண்டும்! இலட்சியத்தில் வெற்றி
சுளையாகப் பெறுவோரே இனித்தோன்றல் வேண்டும்!
தோன்றல்உன் நினைவதற்குத் துணைசெய்தல் வேண்டும்!
சளையாது தமிழீழம் சடுதியிலே மீட்கச்
சபதம்உன் பெயரினிலே ஏற்கின்றோம் வாழி!

கதிமோட்சம் தமிழுக்கு, தமிழருக்கு இந்தக்
காசினியில் ஓர்நாடு சுதந்திரமாய் அமைந்து
மதித்துலகம் போற்றுமாறு ஐ. நா. வில் அங்கம்
வகிக்கின்ற அந்நாள்தான் வாய்க்குமிது உண்மை!
கதிரவேல்கள் உன்னைப்போல் இலட்சோப லட்சம்
கதித்தெழுந்தச் செயல்முடிக்கத் தமிழுலக மெல்லாம்
உதித்தெழுவர் இதுவுறுதி! உன்நினைவுச் சின்னம்
உலகத்தில் தமிழீழம் ஒன்றேதான் வாழி!

## தபால் நிலைய ஊழியர் எங்கே?

யாழ்- தபால் நிலைய ஊழியர் அருணகிரிநாதன் என்பவரை அண்மையில் பொலிஸார் கைது செய்து தம்முடன் கூட்டிச் சென்றுள்ளனர்.

கொக்குவில் கிழக்கு கோணாவில் ஒழுங்கையைச் சேர்ந்த இவர் எங்கே வைக்கப்பட்டிருக்கின்றார், அவருக்கு என்ன நடந்தது என்பதை அறிய முடியாமல் அவரது உறவினர் தவிக்கின்றனர்.

இவரைப் போல பல இளைஞர்களை பொலிஸார் கூட்டிச் செல்வதும், அவர்களுக்கு என்ன நடக்கின்றது.

## வல்வெட்டித்- துறையில் இராணுவ சேட்டை

வல்வெட்டித்துறைப் பகுதியில் ஒருசில வீடுகள் அடிக்கடி பாதுகாப்புப் படையினரால் சோதனையிடப்பட்டு வருகின்றன.

வடபகுதி கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக நடத்தப்பட்டுவரும் விசாரணைகள் தொடர்பாகவே இப்பகுதி வீடுகள் சோதனையிடப்படுகின்றன.

அத்துடன் தலைமறைவாகியுள்ள சந்தேக நபர்களையும் பாதுகாப்புப்படையினர் தேடி வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்வலை வேட்டுவன்!

## டாக்டர் அ. விநாயகமூர்த்தி

எம். ஏ., எம். ஃபில்., பி. எச். டி.

சொல்லுக்கு வலிமை உண்டா?

உண்டு; சொல்லுதல் வல்லார்ப் பெறின் நிச்சயமாக வலிமை உண்டு.

அவை அறிந்து, ஆராய்ந்து, அஞ்சாது, சொல்கின்ற தூய்மையாளர் சொல்லுக்கு வலிமை உண்டு. வாழ்க்கையை எடுத்து நிறுத்துவதும் இன்புறுத்துவதும் சொல்தானே?

'சொல்' என்ற சொல்லுக்கே, நெல் என்ற பொருள் பழைய இலக்கியத்தில் உண்டு. சோறு என்பதிலும் வேர்ச் சொல் சொல் என்பதுதான்.

ஆனால், நுட்பமாக எண்ணிப் பார்த்தால்; சோற்றினால் மட்டும் நடப்பதல்ல மனித வாழ்க்கை. உடம்பு சோற்றால் வாழ்வது உண்மை. ஆனால் உயிர் வாழ்க்கை சொல்லினால் தான் நடக்கிறது.

சிந்தனையின் பிழிவு சொல் அன்றோ!

சிக்கல் வரும் நேரத்தில் சிந்தனை வேகமாகவும், நுட்பமாகவும், தெளிவாகவும் செயல்பட வேண்டும். சிக்கலுக்குரிய தீர்ப்புச் சொற்கள் அப்போதுதான் வேகத்தோடும் நுட்பத்தோடும் தெளிவோடும் வெளிவரும்.

பேரறிஞர் அண்ணா அத்தகைய சொல்திறம் வாய்ந்தவர்.

ஒரு சான்று காண்போமா?

அண்ணா முதல்வராகப்பதவியேற்ற பின்பு, காரைக்குடியில் சிறுகதை மன்னர் தென்னரசு அவர்களோடு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். அழகப்பர் கல்லூரித் தமிழ் மன்ற விழாவில் மாணவர்களிடையே உரையாற்றுகிறார்.

நடுவண் அரசு கொண்டிருந்த இந்திக் கொள்கைக்குக் "கழகத் தலைவர் என்ற முறையில் அன்றி, மாநில முதல்வர் என்ற வகையில், அண்ணா பதில் எவ்வாறு சொல்லப் போகிறார், மொழிக் கொள்கையில் பின்வாங்கி விடுவாரா" என்றெல்லாம் மாணவர்களும், தமிழார்வலரும் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

பல்வேறு செய்திகளைத் தொட்ட பின்பு, அண்ணா இந்தப் பிரச்சினைக்கு வந்தார்.

"பெரும்பான்மை மக்கள் பேசுகின்றார்கள் என்ற காரணத்தைக் காட்டி இந்திதான் ஆட்சி மொழி என்றால், அது ஏட்டளவில் இருக்குமே தவிர அதனால் தமிழின் இனிமையும் வளமையும் சிறப்பும் ஒரு நாளும் குன்றி விடாது.

"டெல்லியிலிருந்து சொல்வதெல்லாம் உயர்ந்ததல்ல. மாடியில்இருக்கும்குப்பையைக் கூட்டிக்கீழே தள்ளினாலும் அது குப்பைதானே தவிர, மாடியிலிருந்து விழுகிறதே என்பதற்காக அதைக் குண்டு மல்லிகை என்று ஏற்றுக் கொள்ள முடியுமா?"

அண்ணாவின் சொற்பின்னல் கண்டு மகிழ்ச்சி ஆரவாரத்தினால் மன்றமே தூள் பறந்தது.

பொருளாதாரத்தில் ஹானர்ஸ் பட்டம் பெற்றவராக இருப்பினும் அண்ணாவின் நெஞ்சம் தமிழ் இலக்கிய நெஞ்சமாக விளங்கியதே இந்தஉணர்ச்சிக்குக் காரணம்.

"கேட்டார்ப் பிணிக்குந்
தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ்
சொல்" என்ற குறளுக்கு அண்ணா இலக்கியமாக விளங்கினார். மேடைப் பேச்சினை இலக்கியமாக்கினார்.

இலக்கியத் திறனாய்வு என்ற கோணத்திலிருந்து பார்க்கும் போது அவரை அடுத்துப் பேச்சினை இலக்கியம் ஆக்கியவர் கலைஞரே எனலாம்.

கழகத் தோற்றத்திற்கு முன்னரும், மேடையில் பேசியதை நூலாக வெளியிட்டநிகழ்ச்சிகள் பல கட்சிகளிலும் உண்டு என்றாலும், கழகம் தோன்றிய பின்புதான் "பேச்சு -- நூல்கள்" பொது மக்களிடம் பெரும் வரவேற்புப் பெற்றன.

அப்படி வெளியிடப்பட்ட 'பேச்சு -- நூல், வரிசையில் அண்ணாவுக்கு அடுத்து கலைஞருக்கே சிறப்பிடம் உண்டு.

பள்ளியில் படித்த காலத்தில் கலைஞர் கொண்டிருந்த மொழிப்பற்று, இலக்கிய வேட்கை மட்டும் இதற்குக்காரணமல்ல, தொடர்ந்து பல நூல்களைப் படித்தமையும் ஆழ்ந்து சிந்தித்தமையும் ஆகிய பயிற்சிகள் இதற்குத் துணை நின்றன.

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதி நுட்பம் யாஉள முன்நிற் பவை?

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் சட்டமன்றத்தில் கொண்டு வந்தனர். பல்வேறு பிரச்சனைகள் எழுப்பினர்; வினாக்கள் தொடுத்தனர். அவற்றைக் கலைஞர் அமைதியாகவும் ஆர்வத்தோடும் கேட்டார். பின்பு, தேவையான குறிப்புக்களைத் தொகுப்பித்தார். அவர் பதில் கூற வேண்டிய கட்டம் வந்தது.

கலைஞர் எழுந்தார். இடைவேளையும் இன்றிப் பல மணி நேரம் தொடர்ச்சியாக உரை நிகழ்த்தினார். ஒவ்வொரு வினாவிற்கும் விடை தந்தார்.

சமுதாயப் பணிகள், நிதி ஒதுக்கீடுகள் பற்றிப் புள்ளி விவரங்களோடு பதில் தந்து, தம் அரசு சமுதாயப்பணியில் எவ்வகையிலும் பின்தங்கி விடாது என்று எடுத்துரைத்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறவில்லை. கலைஞரின் முழுப் பேச்சையும் சட்டமன்றக் குறிப்பேட்டில் படித்த பூரசியல் வித்தகர்கள் அவ்வளவு குறிப்புக்களையும் தொகுத்து நிரல்படுத்தி அழகாகக் கூறிய அவரது சொல் வன்மையைப் பாராட்டினார்.

அரசியல் பேச்சில் மட்டுமல்ல இந்தச் சதுரப்பாடு நிருபர்கள் கூட்டத்திலும் சாதாரண உரையாடலிலும் இலக்கிய விழாக்களிலும் இத்திறன் வெளிப்படுதல் காணலாம்.

நிருபர்கள் கூட்டத்தில் ஒருவர் கலைஞரை நோக்கி "நீங்கள் நாடார்களுக்கு உதவி செய்வதில்லை என்று கருத்து உலவுகிறதே, இதற்கு உங்கள் பதில் என்ன?" என்கிறார்.

முதலமைச்சரை வலையில் சிக்க வைக்கும் வினாஇது. ஆம், இல்லை என்ற எந்த விடையுமே அவரைச் சிக்கலில் கொண்டுவிடும்.

சமூக சீர்திருத்தப் பணியில் தந்தை பெரியார் ஈடுபட்ட நாளிலிருந்து திராவிட இயக்கத்திற்குத் தோள்கொடுத்துத் துணை நின்றதில், நாடார் சமூகத்தினருக்குப்பெரும்பங்கு உண்டு டபிள்யூ. பி. ஏ. சவுந்தரபாண்டியன் முதலான அன்பர்களைக் கலைஞர் எப்படி மறப்பார்?

ஆனால், முதலமைச்சர் என்ற பொறுப்பில் இருக்கும்போது ஒரு சமூகத்திற்கு மட்டும் உதவி செய்கிறோம் என்றாலும் பிழையாகும்: உதவி செய்யவில்லை என்று மறுத்தாலும் எதிர்க்கட்சியினர் 'பிடித்து,க் கொள்வார்கள்.

இந்தச் சொல் வலையிலிருந்து எப்படி விடுபடுகிறார்?

"உண்மைதான்; நாடியவர்களுக்கு அரசு கட்டாயம் உதவி செய்து கை கொடுக்கும். நாடாதவர்களுக்குஎன்ன செய்ய முடியும்?" என்கிறார்.

மற்ற நிருபர்கள் நகைக்கிறார்கள். வினாத் தொடுத்தவரும் ஒரு விநாடி திகைத்துப் பின்பு உடன் கலந்து கொள்கிறார். வேறு வழி?

மற்றொரு நிகழ்ச்சி:

"தந்தை பெரியார் தமிழைக் காட்டுமிராண்டிமொழி என்று சொல்லி விட்டாரே, உங்கள் பதில் என்ன?"-- ஒரு துண்டுச்சீட்டு, மேடையில் பேசும் கருத்து கலைஞருக்கு வருகிறது.

இதற்காக வீட்டுக்குப் போய் ஒரு மணி நேரம் ஆராய்ச்சி செய்துவிட்டு வந்து பதில் சொல்ல முடியுமா? கலைஞர் பதில் பிசிறில்லாமல் வருகிறது; உடனுக்குடனே.

"தந்தை பெரியார் சிறந்த அறிஞர்" 'மனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்த காலத்திலேயே தோன்றியது தமிழ்' என்பதைத்தான் அவர் இப்படிக் கூறினார்' என்றார்.

மக்கள் வெள்ளம் மகிழ்ச்சிக் கடலில் கலந்தது. கேள்வி கேட்டவரைத்தான் காணவில்லை.

வேறொரு நிகழ்ச்சி;

மதுரையில் உள்ள யாதவர் கல்லூரித் தமிழ் இலக்கிய மன்ற விழாவிற்குக் கலைஞர் அண்மையில்வந்தார்.

"சாதி, குல, வருண வேற்றுமைகளைப் புறக்கணிக்க வேண்டும் என்பவர் யாதவர் கல்லூரி விழாவிலா? என்று சிலர் புருவம் உயர்த்தினர்.

கலைஞர் தொடங்கினார்.

"நான் சாதி அறியாதவன்; நண்பருக்கும் பகைவருக்கும் வேறுபாடு புரியாதவன்; தமிழை முற்றவும் அறியாதவன்; இந்தக் கல்லூரி நாவாக்கத்துமரா இம் முதலலாம் தெரியாதவர்கள். ஆகவே இனிய இவைத்தாடு எனும்படி என்னை அழைத்திருக்கின்றீர்கள்.

சொற்பின் வருநிலை அணி, கேட்டவர்களை அணியணியாக அவரது சொற்பின் வரும் நிலைக்கு ஆளாக்கி விட்டது.

இவர் உள்ளம் எந்த நிலையிலும் தமிழச் சொற்களிலேயே திளைத்திருந்தது என்பதற்கு வேறொரு சான்று; திருச்சி மத்திய சிறையில் கழகத் தோழர்களோடு இவர் இருந்தபோது இது நிகழ்ந்தது. ஒரு கைதியைக் காட்டி "இவன் பதினைந்து தடவைக்கு மேல் சிறைச்சாலைக்கு வந்து விட்டான், கஞ்சா கடத்துவதே தொழில். சிறைச்சாலை வாழ்க்கையைப்பற்றி கவலைப் படுவதே இல்லை. சிறைச்சாலைக்குள்ளேயும் எப்படியாவது கஞ்சாவைக் கடத்தி வருகிறான்" என்றெல்லாம் ஒரு தோழர் சொல்லிக் கொண்டிருந்தார்.

எல்லாத் தோழர்களும் கலைஞர் என்ன 'கமெண்ட்' அடிக்கப் போகிறார் என்று பார்த்துக் கொண்டே இருந்தனர்.

"இவனல்லவா சிறைக்கஞ்சாச் சிங்கம்!" என்றார் கலைஞர் சிறைக்கோட்டம் சிரிப்புக்கோட்டம் ஆயிற்று.

சிறையிலிருந்தபோதும் நண்பர்களோடு இப்படிச் சிரிக்கச் சிரிக்கப் பேசிக்கொண்டிருந்தார். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பதன்றோ வள்ளுவம்.

இந்தச் சொல் விளையாட்டு இவர் தேடி எடுப்பதல்ல; தானாகவே வருவது.

எழுத்திலே எழுதும்போது சொற்களைத் தேடிக் கோக்கவோ அடித்துத் திருத்தவோ நேரமுண்டு. பேசும்போது உடனடியாக வர வேண்டும். அது இவர்களுக்கு இயல்பாக ஆயிற்று.

"உயர்ந்த மாளிகைகள்— தாழ்ந்த உள்ளங்கள்" இந்த 'காண்ட்ராஸ்ட்' வசனத்திற்கு அழுத்தம் கொடுத்தது. இது எழுத்துக்கு எடுத்துக்காட்டு.

"கரும்புக் கரம் — இரும்புக் கரம்" - தொடர் இவரிடமிருந்து எழுந்தபோது அங்கலாய்த்தவர்கள், பிற்காலத்தில் இதன் உண்மையைத் தம் அனுபவத்தில் உணர்ந்து பாராட்டினார்கள்.

"பார்த்தேன், படித்தேன், ரசித்தேன்" என்ற சொற்றொடர் எவ்வளவு அழுத்தமானது!

"உங்கள் 'அரசியலை' அவன் தாங்க மாட்டான்: 'அவன் இளந்தளிர் அவனை விடுங்கள்'" என்ற தொடர் எவ்வளவு புகழ் பெற்றுவிட்டது!

அவரிடமிருந்து வெளிப்படுகின்ற சொற்கள், 'புகழ் பெற்று' விடுகின்றன. சுருக்கமும் தெளிவுமே அதற்குக் காரணம்.

இலக்கிய நடையிலேயே இவரிடமும் குறும்பு விளையாடும்; ஒரு சான்று:

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலச் செய்திப் படம் இவர்தம் விளக்கவுரையோடு அரங்குகளில் நடந்தது. வெறும் 'விளக்கவுரை' யல்ல அது. கவிதையுரை. அதற்காகவே அடுத்தடுத்துப் படம் பார்த்தவர்கள் உண்டு.

அலங்கார வண்டிகளில் கம்பராமாயணக் காட்சி ஒன்று. கோசிகமுனிவன் பின்னால் இராமலக்குவர் செல்கின்றனர். மாளிகை மாடத்தில் சீதை. கம்பர் சொன்னார்: "அண்ணலும் நோக்கினான். அவளும் நோக்கினாள்".

கலைஞர் சொற்குறும்பு தவழ்கிறது: "அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள். அதை முற்றும் துறந்த முனிவனும் நோக்கினான்."

இதைக் கேட்டு அரங்கத்தில் ரசித்துக் கை தட்டி மகிழாதவரும் உண்டோ?

கடைசியாக ஒன்று சொல்லத் தோன்றுகிறது. 'சங்கராபரணம்' சங்கர சாஸ்திரிகள் உறங்கும் போது அவருடைய மார்பின் மீது காதை வைத்துக் கேட்டால் அவர் மூச்சுக்காற்றும் ஸ்வரம் போடுகிறதே. அதுபோல கலைஞர் மூச்சும் தமிழ் தமிழ் என்று பாடும் போல் தோன்றுகிறது எனக்கு.

"இருந்தமிழே உன்னால்
இருந்தேன் இமையோர்
விருந்தமிழ் தம் என்றாலும்
வேண்டேன்"

என்ற தமிழ்விடுதூதுத் தொடர் இவர்தம் வாழ்க்கைத் தொடர் ஆயிற்று. அதனால் தான் கேட்பவரையெல்லாம் பிணிக்கின்ற சொல்வலை வேடராக அவர் விளங்குகின்றார்.

(முரசொலி 10-4-81)

---

## தேவநாயகம் ஒப்புக்கொள்கிறார்

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை தமிழர் விடுதலைக் கூட்டணி நாட்டைப் பிரித்து தனியாட்சி செய்வதற்கான ஒரு பாலமாக உபயோகிக்கத் திட்டமிட்டுள்ளது. என்று அமைச்சர் தேவநாயகம் ஒரு கூட்டத்தில் பேசியுள்ளார்.

தமிழீழப் போராட்டத்தின் ஒருபடியாகவே மாவட்ட அபிவிருத்திச் சபை விளங்கப் போகின்றது என்ற தேவநாயகத்தின் இவ்வொப்புதல் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கிடைத்த ஒரு பெரும் வெற்றி என்பதில் சந்தேகம் இல்லை என்கிறார் கட்சி சார்பில்லாத ஒரு அரசியல் பிரமுகர்.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

....கிராம யாத்திரை.... கிராம யாத்திரை..... கிராம யாத்திரை....

(5)

# எதிர்க்கட்சி முதல்வர் பதவியால் ஏற்பட்ட நன்மைகள்!

“அடுத்த தேர்தல் தமிழ் ஈழத்திலேதான் நடைபெறும் என்று • தலைவர்கள் தேர்தல் காலத்திலே கூறினர்கள். செயலாளர்நாயகம் திரு. அமிர்தலிங்கம் 1979ஆம் ஆண்டு மேதினக்கூட்டத்தில் அடுத்த மேதினக்கூட்டம் தமிழ் ஈழத்திலே கொண்டாடப்படும் என்றும் கூறினரே. ‘‘எங்கே தமிழ் ஈழம்? இப்பொழுது என்ன நடக்கிறது? என்று, தீவிரவாதிகள் கேட்கிருர்கள்’’ இது கட்சிப்பற்று நிறைந்த ஓர் ஆசிரியரின் வினவாகும். தலைவர் பின்வருமாறு விடையளித்தார் ஒருவர்:

நாட்டுப் பற்றையும் இன உணர்ச்சியையும் தூண்டுதற்கு யூதர்கள் கூறிவந்த செய்தியை இதற்கு உதாரணமாகக்காட்டி இதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. யூதர்கள் வருடாந்தக் கொண்டாட்டமொன்றில் கூடிப் பானம் அருந்தும் பொழுது அடுத்த கொண்டாட்டம் ‘‘எருசலேமிலே’’ என்று கூறிவந்தார்கள். இப்படி அவர்கள் பல ஆண்டுகாலம் கூறிவந்தார்கள். இந்தக் கூற்றிஞல் தமது உணர்ச்சியைத்தூண்டி இலட்சியத்தை அடைதற்கு முயலும் சக்தியை அவர்கள் வளர்த்து வந்தார்கள். இதனைப் போலவே தமிழ்ஈழ உணர்ச்சியைத் தூண்டுதற்காகவே தலைவர்கள் இவ்வாறு கூறிவருகிருர்கள்.

இராமன்மீது கூனி குறை கண்டதுபோல அமிர்மீது குறைகாண விரும்புவோரே இந்தக் கேள்விகளை எழுப்புகின்றனர். ஏனெனில், ஓராண்டிலோ, ஈராண்டிலோ தமிழ் ஈழத்தை எவரும் இலகுவில் பெற்றுத்தரமுடியாது என்பது அரசியலில் அரிவரி தெரிந்தவர்களுக்கும் நன்கு தெரியும். தமிழ் ஈழம் உருவாகுவதற்குச் சில இளைஞர்களின் தீவிரம் மட்டும் போதாது. எல்லாத் தமிழ் மக்களும் ஒன்றுபட்டு ஒரு கொள்கையுடன் ஒரு கட்சியின் தலைமையில் தீவிர உணர்ச்சியுடன் உழைக்க வேண்டும். எல்லோரும் தமிழ் ஈழப் போராட்டத்தில் பங்காளிகளாக வேண்டும். இப்பொழுது பார்வையாளர்களாயிருப்பவர்கள் பங்காளிகளாக மாறவேண்டும். இவர்களிற் சிலர் பகையாளர்களாகித் த. வி. கூட்டணித் தலைமைப் பீடத்தைக் குறைகூறுவதால் தமிழ் ஈழத்தைப் பெற்றுவிடவும் முடியாது; தமிழரின் ஒற்றுமையை உறுதிப்படுத்தவும் முடியாது.

✻

கிராமயாத்திரையின் போது நடைபெற்ற கருத்தரங்குகள் பலவற்றிலே பாடசாலைகளிலே உள்ள ஆகிரியர் பற்ருக்குறையை மக்கள் சுட்டிக்காட்டினர். இந்த அரசாங்கம் தமிழ்ப் பாடசாலைகளுக்குப் போதிய ஆசிரியர்களை நியமிக்காமல் தமிழ் மாணவர்களின் கல்வித் தரத்தைக் குறைக்கச் செய்யும் சூழ்ச்சியின் விளைவுதான் இப்பொழுது தமிழ்ப்பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் பற்ருக்குறை என்றும் சிலபெற்ருேர் ஆத்திரத்துடன் கூறினர்கள். ஆசிரியர்பற்ருக்குறையை அரசாங்கம் விரைவில் நீக்காவிடின் விரைவில் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தப்படல் வேண்டும் என்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சிலர் வற்புறுத்தினர்.

✻

மிளகாய், வெண்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றை இறக்குமதிசெய்து இப்பொருள்களின் விலையை விழுத்தித் தமிழ்ப்பகுதி விவசாயிகளுக்குப் பெரும் நட்டத்தையும், அவலத்தையும், விவசாயத்தை நம்பி வாழமுடியாத நிலைமையையும் உண்டாக்கிய சிங்கள அரசாங்கத்தை விவசாயிகள் பலர் கண்டித்தனர். தமிழ் விவசாயிகளின் பொருளாதாரத்தைப் பாதிப்பதற்காகவே அரசாங்கம் இவ்வாறு செய்ததென்பது அவர்களின் கருத்தாகும்.

‘‘இந்தப் பொருள்களுக்கு நியாய விலையை அல்லது உத்தரவாத விலையைத் தீர்மானியுங்கள், இவற்றை இறக்குமதி செய்யாதீர்கள்’’ என்றுஅமைச்சர்களைப் பாராளுமன்றத்திலும் வெளியிலும் தாங்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்தி

# ‘புரட்சிகர இயக்கம்’ புதிதாகத் தோன்றுமா?

யும்அரசாங்கம் அசையவில்லை என்பதைத் தலைவர்கள் விரிவாகவும் தெளிவாகவும் விளக்கினர்.

✻

‘‘தமிழர்விடுதலைக்கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவர்பதவியை ஏற்றதனலேயே தமிழ்ஈழப் போராட்டம் தீவிரம் அடையவில்லை என்றுசிலர் கூறுகிருர்களே! நிலைமையைத் தெளிவாக விளக்குவீர்களா?’’

‘‘எதிர்க்கட்சித்தலைவர்பதவியை ஏற்றதால் போராட்டம் தீவிரம் அடையவில்லை; சமரச வழியில் த. வி. கூட்டணி செல்கிறது; ஐ. தே.க ஆட்சிக்கு வந்தால் த. வி. கூட்டணியினர் போராடுவதில்லை: ஐ. தே. கட்சி அரசாங்கத்துக்கும் த. வி. கூட்டணிக்கும்இரகசிய உறவு இருக்கிறது; பாராளுமன்றப்பதவியில் சுகபோகங்களை அனுவிக்கின்றனர்......’’ இவ்வாறு சிற்சிலர் குரல் எழுப்புகின்றனர்.

இதற்கு அறியாமை, ஆத்திரம், அழற்சி, அரிப்பு, அழுக்காறு, சொந்தப்பகைமை, உட்பூசல், இடதுசாரித்தீவிரக் கொள்கை......... முதலியனவே காரணங்களாகும். சுதந்ரனின் விஷமத்தனமான செய்திகளும் சில மக்களைத் தடுமாற்றம் அடையச்செய்துள்ளன.

இலங்கையின் வரலாற்றிலே தமிழரின் கட்சி எதிர்க்கட்சித் தலைமையைக் கைப்பற்றியது விதந்து குறிப்பிடத்தக்கதொரு வரலாற்று நிகழ்வாகும். இதுதான் முதலும் கடைசியுமாகும். எதிர்க்கட்சித்தலைமைப்பதவி கிடைத்தமையால் தமிழ் ஈழவிடுதலைக்குப் பலதுறைகளில் பணிபுரியும் வாய்ப்பும், பல நாடுகளோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பும், பிறநாட்டுத் தூதர்களோடு கலந்துரையாடும் வாய்ப்பும், பிறவாய்ப்புக்களும் கிடைத்தன. சிலவற்றைஇங்கு விரித்துக்கூறி விளக்கமுடியாது.

சர்வதேச அரங்கில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் போதிய இடம்பெற்றுள்ளதற்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியே முக்கிய காரணம்- பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஒரு தமிழ்க் கட்சியின் தலைவர் பெற்றத்தாலே தான் இலங்கையிலே தமிழர்கள் கணிசமான அளவு இருக்கிருர்கள். ஒற்றுமையாக ஓர் அரசியற்கட்சியை ஆதரிக்கிருர்கள்; தமக்கெனத் தனிநாட்டை- தமிழ்ஈழத்தை உருவாக்க முயல்கிருர்கள் எனும் உண்மைகளைச் சில நாடுகள் நன்கு அறிந்திருக்கின்றன.

இலங்கையை நன்கு அறியாத சில நாடுகள் கூட இன்று இலங்கையையும், தமிழரின் தனிநாட்டுக் கோரிக்கையையும் அறிந்திருக்கிருர்கள். எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை ஏற்றதால் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் உலக அரங்கில் தீவிர முன்னேற்றம் அடைந்துளது என்பதை எவரும் மறுக்க முடியாது. இதனைப் பகுத்தறிவுடையோர் யாவரும் ஏற்றுக் கொள்வர்.

இலங்கையின் இக்கால வரலாற்றை எழுதும் வரலாற்ருசிரியர்கள் விதந்து குறிப்பிட்டு எழுதும் நிகழ்ச்சிகளில் எதிர்க்கட்சித் தலைமைப்பதவி தமிழ் அரசியற் கட்சிக்குக் கிடைத்தமையும், அப்பதவி தமிழ் ஈழ விடுதலைக்குப் பயன்பட்டமையும் முதன்மையான இடத்தைப் பெறும்.

✻

கிராமயாத்திரையின்போது பா. உறுப்பினர்களின் சிபார்சிஞல் நியமிக்கப்பட்ட பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களின் பணிகளைப்பற்றியும், வேறு சில உத்தியோகத்தர்கள் பற்றியும், பொதுவாக உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் பற்றியும் ஐ. தே. கட்சியின் அமைப்பாளர்களின் ஆரவார ஆட்டங்களைப் பற்றியும் சில கருத்தரங்குகளில் கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டன.

மூன்று பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் பா.உறுப்பினர் கொடுத்த ‘பதவியை வைத்துக்கொண்டு தீவிரம் பேசினர்களாம். ஒருவர் கருத்தரங்குக்குச் சென்ற தலைவர்களிடம் பல கேள்விகளைக் கேட்டார். தலைவர்கள் மறுமொழி கூறியபின் அவர் அடங்கிவிட்டார். அந்தப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தரின் சுட்டித்தனத்தை நேரில் அறிந்த பிறவூர்த் தொண்டர் ஒருவர் இந்தக் குறுக்குக்காரனுக்கு ஏன் இந்த உத்தியோகத்தை கொடுத்தீர்கள் என்று ஒரு பா. உறுப்பினரைக் கேட்டார். இப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் வசதிப்படும்போது தீவிரவாதம் பேசுபவர். இவர் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலில் போட்டியிட ஓடித்திரிந்த ஒருவரின் காரில்சென்று அவருக்கு ஆதரவு தேடும் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

வேறு ஒரு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கருத்தரங்கில் சலசலப்பை உண்டாக்கும் குழுவில் முன்னணியில் நின்ருர் என்று அவருடைய தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருக்கு மக்கள் முறையிட்டனர்.

அடுத்த பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் தொடர்ந்து தீவிரவாதம் பேசுபவர், இவர் அளவெட்டியில் உள்ள ஓர் அச்சகத்தில், யோகபுரம் இளைஞர்கள் என்ற புனைபெயருடன் ‘‘கிராமயாத்திரையா தேர்தல் யாத்திரையா?’’ என்ற தலைப்புடன்‘‘கிராமயாத்திரையைப் பகிஷ்கரியுங்கள்’’ என்று ஒரு துண்டுப்பிரசுரத்தை அச்சிடுவித்துளர். இப்பிரசுரங்களை வவுனிக்குளப் பிரதேசத்துக்கு எடுத்துச் சென்று பரப்பினர்.

இத்துண்டுப் பிரசுரத்தில் இளைஞர்பேரவை (தீவிரஅணி), தீவிரவாத அணி, தமிழ் ஈழ அணி, ஈழவிடுதலை அணி முதலியன யாவும் ஒதுக்கப்பட்டு உழைக்கும் மக்களைக் கொண்ட புரட்சிகர இயக்கம் ஒன்று உருவாக வழியமைப்பது பற்றியும் பேசப்பட்டுளது.

‘‘சொல்வார் சொன்னலும் கேட்பார்க்கு மதி என்ன?’’ என்ருெரு பழமொழி தமிழிலுண்டு. இந்தத்துண்டுப் பிரசுரத்தை வெளியிட்ட தீவிரவாத ப. செ உத்தியோகத்தர் இதனை மறந்து விட்டார் போலும்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மீது அவரால் சுமத்தப்பட்ட குற்றங்களிலே ‘‘தொழிலாள விரோத நடவடிக்கைகளில் அரசுடன் ஒத்துழைத்தல்’’ என்பதும் ஒன்று. தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்திலும் வெளியிலும் தனித்தும் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்தும் அரசுக்கெதிராகத் தொழிலாளர்களுக்காகப் போராடி வருவதை ஊரும் உலகமும் நன்கறியும். இதனை மூடி மறைத்து அரசுடன் ஒத்துழைக்கிறது த. வி. கூட்டணி என்று பச்சைப் பொய்யைத் துணிந்து கூறும் அளவுக்கு அந்த இளைஞரின் உள்ளம் பிறழ்விஞலும் விரக்தியாலும் பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் தெரியாத நிலைமையை அடைந்து விட்டது. இது மிகுந்த கவலைக்குரியது.

நூற்றுக்கணக்கான ஏனைய பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் தங்கள் பங்களிப்பைத் திறமையாகவும் முறையாகவும் நிறைவேற்றி மக்களின் பாராட்டுக்குரியவர்களாஞர்கள். இது மகிழ்ச்சிக்குரியது.

## தமிழ்ப்பகுதிகள் புறக்கணிப்பு

ஐக்கிய தேசியக்கட்சி அரசால் ஆரம்பிக்கப்பட்ட சுய வீடமைப்புத்திட்டம் அம்பாறையிலுள்ள தமிழ்க் கிராமங்களில் எவ்வித அறிவித்தலுமின்றி நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மல்வத்தை, புதுநகரம், காரைதீவு ஆகிய இடங்களில் ஆரம்பித்த வேலை குறைநிலையில் விடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவையான பொருள்களை வழங்கிய தற்காலிக களஞ்சியமும் உடைக்கப்பட்டு காவலாளிகளும் வேலைநிறுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றபடியால், மேற்படி வீடமைப்புப்பணி தொடர்ந்து நடைபெறமாட்டாதென்றே நம்பப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் இலக்கியமாக மணங்கமழும்

# திரை இசைத் தேன்மலர்கள்!

செல்வி க. மகேஸ்வரி

**நாட்டுப் பாடல்களைப் போல் திரைப்படப் பாடல்களும் மக்கள் இலக்கியமாக மணம் வீசும் யுகம் இது. சாதாரணமாக திரைப்பாடல்களென்றால் அந்தந்த நேரங்களில் மட்டும் கேட்டு அனுபவித்து விட்டு அந்த இடத்திலேயே மறந்துவிடக் கூடியவை என்றேபலரும் கருதுவர். ஆயினும் விதிவிலக்காக திரைப்படப்பாடல்களில் சில தேனாக இனிப்பதுண்டு.**

இதயத்தை விட்டகலா இலக்கியச் சுவை மிகுந்த அத்தகைய பாடல்களில் ஒரு சில வற்றையே இந்தக் கட்டுரையில் நாம் காணப்போகின்றோம்.

'பாசமலர்' என்னும் படத்திலே 'மலர்ந்தும்மலராதபாதி மலர் போல' என வரும் கண்ணதாசனின் பாடலில் அடுத்து வருகின்ற சில அடிகளைக் கவனிக்கலாம்.

தென்றல்மென்மையானதாக சுகமானதாக, இனிமையானதாகபலகவிஞர்களால்வர்ணிக்கப்படுகிறது. ஆனால் எந்தக்கவிஞருமே தென்றலை நதியில்விளையாடி கொடியில் தலைசீவிக்' கொண்டு நடந்த தென்றலாகக் குறிப்பிடவில்லை. சாதாரணமாக, தென்றல் நதியிலே வீசுகிறது. அவ்வளவுதான். ஆனால் அதுவே கவிஞரின் பார்வையிலே நதியில் விளையாடிக்கொண்டிருப்பதாகப் படுகிறது. கொடிகளினூடாக நுழையும் அந்தத் தென்றல் கூடக் கவிஞரின் பார்வைக்குத் தப்பவில்லை. அந்தத் தென்றல் கொடிகளிலே தனது தலையைச்சீவிக்கொண்டு அப்பால் நடக்கிறதாம்! நதியில் விளையாடியதென்றலாயிற்றே! விளையாடிய வேகத்தில் அதன் தலையெல்லாம் கலைந்திருக்குமே! அதனால் தான் அது கொடிகளில் தலையைச் சீவிக் கொண்டு அப்பால் நடக்கின்றது போலும்! கொடிகளினூடாகநுழைந்து செல்லும் அந்தத் தென்றல்கவிஞரின் பார்வையிலே, அது கொடியில் தலை சீவிக்கொண்டு செல்வதாகப்படுகிறது. இந்த நயம் ஒன்றே, அந்தப் பாடலை யுகம் யுகமாக ரசிப்பதற்கு, நினைக்குந்தோறும் நினைவுகளில் இனிப்பதற்குப் போதுமானதாகும்.

இதே போலவே 'சிவந்த மண்' படத்தில் வருகின்ற 'பார்வை யுவராணி கண்ணோவியம்' என்ற கண்ணதாசனின் பாடலில் வருகின்ற நயத்தையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். சாதாரணமாக பெண்களைப் பலவற்றுடன் கவிஞர் ஒப்பிட்டுக் கூறுவர். பாலாக, பழமாக தேனாக பெண்களை வர்ணிக்கும் எத்தனையோ பாடல்கள் அந்த நாள் தொடங்கி இந்த நாள் வரையும் கவிஞர்கள் வாயிலாக எமக்குக் கிடைத்துள்ளன. ஆனால் இந்தப் பாடல் வர்ணனைகளில் ஒரு வித்தியாசமான நயத்தைக் கவனிக்லாம்.

''பாலென்று சொன்னாலும்
பழமென்று சொன்னாலும்
ஏனென்று தேன் வாடுமே
மான் வண்ணம் என்றாலும்
மலர் வண்ணம் என்றாலும்
குறைவென்று தமிழ் சொல்லுமே''

இங்கு கவிஞரின் மனம் நன்றாகப் புரிகிறது. எதனுடனும் அந்த நாயகியை ஒப்பிட்டுச் சொல்ல கவிஞருக்கு இஸ்டமில்லை. எதனுடன் ஒப்பிட்டாலும் அது குறைபாடுடையதாகவே இருக்குமென்று கவிஞருக்குத் தோன்றுகிறது போலும். அந்த நாயகியின் சுவையை, இனிமையை நினைத்து அவளை எதனுடன் ஒப்பிடுவது என்பதில் கவிஞருக்குத் தடுமாற்றம். பால் என்று குறிப்பிட்டாலும், பழம் என்று குறிப்பிட்டாலும் 'ஏன் நான் இல்லையா? நான் இனிமையில் குறைந்தவனா? என்று தேன் வாடுமாம். அவளுடன் ஒப்பிடப்படுவதில் அவற்றினுள் கூடப் போட்டி! அந்த நாயகியைப் போல என்று சொல்வதால் அவை பெருமையடைந்துவிட முயல்கின்றன போலும்! சரி இவை தான் போகட்டும். அவளுடைய வடிவத்தையாவது எதனுடனாவது ஒப்பிட முடிகிறதா என்று பார்ப்போம். இங்கே மானாகவோ, மலராகவோ குறிப்பிட்டுக்காட்ட முடியாத நிலை கவிஞருக்கு. ஏனென்றால் தமிழ் அன்னை குறைப் பட்டுக்கொள்வாளாம். அவளை உவமிக்க இவை முழுமையாகப் பொருந்த மாட்டாவாம். இவை எல்லாவற்றையும் விட நிறைவான ஒரு அழகாம். எனவே இந்தப்பாடலை முழுமையாகக் கேட்கின்றபோது ஒரு நாயகியை - எதனுடனும் ஒப்பிட்டு விட முடியாதளவிற்குச் சிறப்புப் பொருந்திய ஒரு நாயகியைத்தான் காணமுடிகிறது. ஒவ்வொன்றுடனும் ஒப்பிட்டுக் கவிதை படைக்கின்ற நிலையிலிருந்து சிறிது வித்தியாசப்பட்டுக் காணப்படும் ஒரு உவமையே இங்கு நயக்கத்தக்க தொன்றாக அமைகிறது.

இவ்வாறான ஒரு நயத்தையே 'நிலவே நீ சாட்சி' என்னும் படத்திலுள்ள 'பொன்னென்றும் பூவென்றும்' என்ற கண்ணதாசனின் பாடலிலும் கவனிக்கலாம். இங்கும் கவிஞருக்கு ஒரு தடுமாற்றம் ஏற்படுகிறது. 'பொன்னென்றும், பூவென்றும் தேனென்றும் சொல்வேனோ' என்பதில் எப்படிச் சொல்வது என்று திகைத்து நிற்கும் கவிஞரின் மனம் தெரிகிறது. ஒரு புதுமையான நயத்தில் ஒரு நாயகியை அடுத்து வரும் வரிகளில் சுவைக்கலாம்.

மூன்று கனிச்சாறு ஒன்றாகப்
பிழிந்து
மோக ரகம் கொஞ்சம் அள
வோடு கலந்து''

தனித்து ஒரு கனியை மட்டும் சொன்னால், அவளின் இனிமை குறைந்து விடும் போலிருக்கிறது. அதனால் தான் மூன்று கனிச்சாற்றையும் ஒன்றாக்கிக் காட்டுகிறார் கவிஞர். மோக ரசம் கூட அளவோடுதான் கலக்கப்பட்டிருக்கிறது. அது கூட அளவு மீறவில்லை. இவ்வாறான ஒருத்தியைப் பார்த்தால் இயற்கை கூட நின்று போகாதா என்ன?

''கோடை வசந்தங்கள்
குளிர்காலம் என்று
ஓடும் பருவங்கள் கணநேரம்
நின்று
காதல் கவிபாடும் அவள்
மேனி கண்டு''

பருவ காலங்கள் கூட அவளைப் பார்த்ததும் நின்று விடுகின்றனவாம். பருவகாலங்கள் தாமதிப்பதற்குக் காரணம் கூட அவளாகத்தான் இருக்கும் போலிருக்கிறது. அவை நின்று பார்த்து விட்டுச் சென்றால் மட்டும் போதாதா? அவை கூட அவளைப் பார்த்ததும் காதல் கவிபாடத் தொடங்கி விடுகின்றனவாம். இயற்கையே அவளைப் பார்த்துக் காதல் கொள்கிறதென்றால் எத்தகைய அழகியாக இருக்க வேண்டும் அவள்? அவளுடைய கண்களைக் குறிப்பிடும் போது கவிஞர் சொல்லுவார்.

'கண்கள் ஒளி வீசும் அதி-
காலை வெள்ளி'

சாதாரண வெள்ளியல்ல. அதிகாலை வெள்ளி. அதிகாலை வெள்ளிக்கென்ன சிறப்பு? பிரகாசம் மிக்க அந்தக் கண்கள் அதிகாலையில் தோன்றும் அந்த வெள்ளியைத் தவிர வேறு என்னவாயிருக்கும்? இவ்வாறான வர்ணனைகள் எல்லாம் சேர்ந்து பேரெழில்மிக்க ஒரு பெண்ணை நம் கண்முன்னால் நிறுத்துகின்றன.

பெண்ணை அங்கம் அங்கமாக வர்ணிக்கும் பாடல்கள் பலவற்றைக்கவிதைப் பரப்பில் கவனிக்கலாம். இந்த ரீதியில் நயம்மிக்க ஒரு வர்ணனையை பணம் படைத்தவன் என்னும் படத்தில் வருகின்ற கவிஞர் வாலியின் பாடலில் காணலாம்.

'பவளக் கொடியில் முத்துக்
-கள் பூத்தால்
புன்னகை என்றேபேராகும்.

பவளவிதழ், முத்துப்பல் என்று வர்ணிக்கும் வர்ணனைகளை இலக்கியங்களில் அதிகமாகக் காணலாம். ஆனால் 'புன்னகை என்பது பவளக்கொடியில் முத்துக்கள் பூப்பது தான்' என்று அடித்துச் சொல்லுகின்ற ஒரு வர்ணனை இது. பவளம் என்பது பெண்ணினது சிவந்த இதழைக் குறிப்பிடுவது. பவளம் போன்ற அந்த சிவந்த இதழ் விரியும் போது தெரிபவை அந்த முத்துப்போன்ற பற்கள்தான். ஆனால் இதழ்கள் புன்னகைக்கும் போது தானே விரியும்? புன்னகையினால் அந்த இதழ்கள் விரியும் போது தான் உள்ளிருந்து அந்த வெண்பற்கள் தெரிகின்றன. ஆகவேதான் கவிஞர் அடித்துச் சொல்கிறார். ''பவளக்கொடியில் முத்துக்கள் பூத்தால்புன்னகை என்றேபேராகும்'' சாதாரணமாக பவளம் போன்ற இதழ்கள் இருக்கலாம். ஆனால் அங்கு முத்துக்கள் பூக்கும் போது தான் அது புன்னகையாகும். சாதாரணமாகவே புன்னகை பூத்தல் என்று தானே குறிப்பிடுகிறோம். ஆகவே தான் கவிஞர் வாலியின் இந்த உருவகம் மிகவும் இனிக்கின்றது.

இதனையே தான் கவிஞர் வாலி இன்னோரிடத்தில் வேறு விதமாகச் சொல்கிறார். 'எதிரொலி' என்னும் படத்தில் வருகின்ற 'குங்குமச் சிமிழில்' என்றபாடலை நோக்கும்போது இது புலனாகிறது.

'குங்குமச் சிமிழில் மாதுளை
முத்துக்கள் கொட்டிக்கிடப்ப
தென்ன-அதை
மங்கலச் சிரிப்பில் மாலை
களாகக் கட்டிக் கொடுப்ப
தென்ன''

இதிலே பெண்ணின் வாய் குங்குமச் சிமிழுக்கு உவமையாக்கப்படுகிறது. மாதுளை முத்துக்களாகப் பற்கள் குறிப்பிடப்படுகின்றன. இங்கு கவிஞரின் ஆச்சரிய உணர்வு பளிச்சிடுகின்றது. குங்குமச்சிமிழில் எப்படி மாதுளை முத்துக்கள் வந்தன? அதுதான் போகட்டும். அதை எப்படி மாலைகளாகக் கட்டிக்கொள்வதாம்? சாதாரணமாக முத்துக்களாகத் தெரிந்த அந்தப் பற்கள் அவளின் நீண்ட மங்கல நாதமாக ஒலிக்கின்ற சிரிப்பில் முத்துமாலையாகக் கவிஞருக்குத் தோற்றுவதில் ஆச்சரியம் என்ன? சிரிக்கும்போது நீண்ட நேரத்திற்கு அந்தப் பற்கள் தெரிகின்றனவல்லவா? அந்த நிலைதான் அவை மாலையாகத் தோற்றும் ஒரு பிரமையைக் கவிஞருக்கு உருவாக்குகின்றன. குங்குமச்சிமிழில் மாதுளை முத்துக்கள் கொட்டிக் கிடப்பதென்ன? அதை மங்கலச் சிரிப்பில் மாலைகளாக்கி கட்டிக் கொடுப்பதென்ன? இங்குதான் கவிஞரது வியப்பு எல்லை மீறுகிறது.

## வீரகேசரி செய்தி - ஒரு விளக்கம்!

ஆசிரியர் அவர்கட்கு,

கடந்த 18-4-81 வீரகேசரியில் 3 ம் பக்கத்தில் ',இளைஞர்தேவா - கூட்டணித் தலைவர்கள் சந்திப்பு'' என்ற தலைப்பில் அதன் நிருபர் திரு. எஸ். தில்லைநாதன் அறியாமல்குறிப்பிட்ட செய்திகளை மறுத்து அங்கு ஆம்பம் முதல் இறுதி வரை நின்றவன் எள்ற முறையில் உண்மைகளை வெளிப்படுத்த இதை எழுதுகிறேன்.

உடுப்பிட்டித் தொகுதியில் கிராமயாத்திரையின் போது தாம் செய்த தவறுகளை உணர்ந்து தலைவர்களை அழைத்து சமரசம் பேசவே இக்கரத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது. தேவதாஸ் என்ற இளைஞர் எழுதிய கடிதப்பிரகாரமும், திரு. நடராசா என்பவரது வேண்டுகோளாலுமே இக்கருத்தரங்கு தலைவர் திரு. சிவசிதம்பரம் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஈழவிடுதலை, இலட்சியவேகம், விடுதலை வேகம் பற்றி தம்பி தேவதாஸ் எதுவும் கூறவில்லை. அவர் தாங்கள் 20 பேருடன் அமிர், சிவா, மாவை, உடுப்பிட்டி இராசு ஆகியோர் மட்டுமே பேசவேண்டுமெனவும், மற்றையவர்யாரும் நிற்கக் கூடாததெனவும் கேட்டுக் கொண்டார். அதற்கே செயலாளர் நாயகம் உங்கள் பிரச்சனைகளைச் சொல்லுங்கள், நாமும் பதில் சொல்லுகிறோம். மக்கள் தீர்ப்பு வழங்கட்டும் என்றார். எமக்கு நீங்கள் 20 பேர்மட்டுமல்ல உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள சுமார் 35 ஆயிரம் வாக்காள மக்களும் சமம் என்றார். நாம் யாரையும் கருத்தரங்கை விட்டு வெளியே போகச்சொல்வது முறையல்ல என்றார்.




தேவதாசுடன், இன்னும் சில சிறுவர்கள் வாலிபர்கள் காணப்பட்டனர். எந்த நிலையிலும் தேவதாஸ் அங்கிருந்து செல்லவில்லை. கருத்தரங்கு ஆரம்பமானது. கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டது. எக்கேள்வியும் எழவில்லை தேவதாசும், நண்பர்களும் முழுநேரமும் கூட இருந்தனர். செயளாலர் நாயகம் சுமார் 1½ மணித்தியாலம் மாவட்ட சபை பற்றி போதிய விளக்கமளித்தார். இக்கருத்தரங்கிற்கு பல பகுதியிலிருந்து சுமார் 175 பேர்வரை சமுகம் தந்திருந்தனர்.

முக்கியமாக பத்திரிகை நிருபர் தில்லைநாதன் செயலா

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுவின் சிபார்சை உடனே அமுல்படுத்துக!

## அரசுக்கு அமிர் வலியுறுத்து!

1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் இனக் கலவரத்தின்போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் குடும்பத்தினருக்குரிய நஷ்டஈட்டை தாமதமின்றி வழங்கும்வகையில் சன்சோனி ஆணைக்குழு தெரிவித்த சிபார்சுகளை உடன் அமுல்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு.அமிர்தலிங்கம் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளார்.

இத சம்பந்தமாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு தலைவர் அமிர் எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அக் கடிதத்தில் பின் கண்டவாறு மேலும் குறிப்பிட்டுள்ளார்:-

தங்களுக்குச் சமர்பிக்கப்பட்ட சன்சோனி ஆணைக்குழு அறிக்கையில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட சேதம் உயிரிழப்புகள், மற்றும் உடல் ரீதியான பாதிப்பு முதலானவை குறித்து சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. இவை 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13ஆம் திகதி முதல் செப்டம்பர் 15 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் ஏற்பட்டவை.

மேற்கண்ட காலத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் மற்றும் சேதத்திற்கு ஆளானவர்களிடமிருந்து அநேக புகார்கள் கிடைத்திருக்கின்றன. அதாவது தமக்கு ஏற்பட்ட சேதங்கள் மற்றும் தமது குடும்பத்தவர்களின் உயிரிழப்புகளுக்காக நஷ்டஈடு வழங்கவேண்டும் என அவர்கள் கேட்டிருக்கின்றனர்.

நஷ்டஈடு வழங்குவது தொடர்பாகசன்சோனிஆணைக்குழு செய்த சிபார்சுகளை அரசாங்கம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்த்த நான் இவ்வளவு காலமும் அமைதியுடன் இருந்தேன். மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பதினைந்து மாத காலமாகியும் அறிக்கை வெளியிடப்பட்டு ஐந்து மாத காலமாகியும் அது குறித்து எதுவித நடவடிக்கையையும் இன்னும் எடுக்காமல் குறித்து நான் ஏமாற்றம் அடைந்து விட்டேன். குறிப்பிட்ட குடும்பத்தினருக்கு வழங்கப்பட வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகை குறித்து அரசாங்கம் நிர்ணயிக்காமல் இருப்பது தொடர்பாகவும் நான் ஏமாற்றம் அடைந்திருக்கிறேன்.

ஏற்கனவே நானும் எனது கட்சி உறுப்பினர்களும் தங்களுக்கு இதுபற்றி முறையிட்டபோது மேற்படி ஆணைக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும்வரை பொறுத்திருக்குமாறு வேண்டப்பட்டோம்.

ஆணையாளர் சன்சோனி தனது சிபார்சில் சேதம் அடைந்த குடும்பத்தினருக்கு முழு நஷ்டஈடும் அரசாங்கத்தினால் வழங்கப்படவேண்டும் எனவும், தமக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து மகஜர் சமர்ப்பித்திருப்போர் விபரங்கள் தொடர்பாக தகுதிவாய்ந்தவர்களினால் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு நஷ்டஈட்டு அளவுத் தொகை குறித்து நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும், அதற்கேற்ப அத்தகையோருக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் குடும்பத் தலைவர்களையும் மற்றும் குடும்ப ஜீவியத்திற்காக உழைத்தவர்களையும் இழந்து அநேக குடும்பங்கள் தவிக்கின்றனவென்றும் அத்தகையோரின் நிலவரங்கள் குறித்து மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்து அதிகளவு தொகை கொண்ட பென்ஷன் அத்தகைய குடும்பத்தினருக்குவழங்க தேண்டும் எனவும் சிபார்சு செய்துள்ளார்.

எனவே ஆணையாளர் சன்சோனியின் மேற்படி சிபார்சுகளை உடன் அமுல் படுத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு போதிய நஷ்டஈடு வழங்குவதற்கு அரசாங்கம் உடன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

## வீரகேசரி ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் நாயகத்தின் விளக்கத்திற்கு சற்று முன்னராகவே அங்கு வந்தார். முழுக்கூட்டமும் மூன்று மணி நேரம் நடைபெறவில்லை. தனக்குத் தெரியாதவற்றை யெல்லாம் நிருபர் எழுதியுள்ளார்.

தேவதாசுக்கு ஒன்றை மட்டும் இத்தால் வெளிப்படுத்த விரும்புகிறேன். ஆக நீங்கள் 20 பேர் மட்டும்தான் உடுப்பிட்டித் தொகுதியில் இருக்கிறீர்கள் என்பதை மறந்து விடுங்கள். தினமும் கடற்படை, தரைப்படை ஆகியவற்றின் தொல்லைகட்கு ஆளாகிக் கொண்டு தமிழ ஈழ விடுதலைக்கு உயிர் கொடுக்க பொலிகண்டிதொண்டமானுறு வல்வை பகுதிகளில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் இருக்கிறோம். எங்கள் இரு பகுதியாரின் குறிக்கோளும் ஒன்று இதை மறக்கவேண்டாம். அன்றைய கூட்டத்தில் அந்த இருபதுபேருக்குள் உதயசூரியன் கொடியைச் கிழித்த இனிய நண்பரும் கூடநின்றார். தேவாதாசுக்கும் அவர் நண்பர்சட்கும் இன்னுமொன்றைக் கூறவிரும்புகிறேன்.

உடுப்பிட்டி பா. உ. வின்சையினால் பா. உ. சிபார்சு செய்த கிடைத்த தையல் மெஷினை வாங்கமாட்டோமென்று கரவெட்டியைச்சேர்ந்த அன்பர்கள் கையெழுத்திட்டு கடிதம் எழுதியுள்ளனர். ஒருவகையில் அவர்களும் தீவிரவாதிகள்தான் சாதியை வளர்ப்பதில் இவற்றை நாம் களைய வேண்டாமா? சிந்தித்து தலைவர்கள்வழிநின்று செயல்படுங்கள். தமிழ் ஈழம் தானாக மலரும் கேட்பார் புத்தி கேட்டு எம் இனத்தை கூறுபோடாதீர்கள்.

சி. சிவபாலசிங்கம்
செயலாளர்
பொலிகண்டி
த. வி. கூ. கிளை

## அடிமை விலங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ஈழம் உருவாகினால் மட்டுமே தமிழ் இனத்திற்கு பூட்டப்பட்டுள்ள அடிமை விலங்கை [illegible]டைத்தெறிந்து விடுதலை பெறலாம் என்பதை உலகம் அறிய எடுத்துக்காட்டுவதற்கும் தங்கள் ஒற்றுமையையும் விடுதலைக்காகப் போராடும் உரனையும் உறுதியையும் வெளிப்படுத்துதற்கும் யாழ்நகரில் நடைபெறும் இந்த மேதினம் நிகழ்ச்சிகளில் தமிழ்த் தொழிலாளர்களையும் ஏனைய தமிழ் மக்களையும் கடலெனத் திரண்டு வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

## நாடு குலுங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்-மத்திய கல்லூரி மைதானத்தில் பி.ப 4 மணிக்கு நடைபெறும் இவ்விழாவில் தமிழர் தலைவர்கள் அமிர், சிவா உட்பட பல்வேறு தொழிற்சங்கங்களையும் அமைப்புக்களையும் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றார்கள்.

விழாவினை ஒட்டி யாழ் நகரமே குலுங்கிடும் வண்ணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியிலிருந்து பி.ப 3 மணிக்கு மாபெரும் ஊர்வலம் ஆரம்பமாகின்றது.

உணர்ச்சிக் கடல் கொந்தளிக்க நடைபெறவிருக்கும் ஊர்வலமும், விழாவும்எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே' எனும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடல் வரிகளுக்கு விளக்கமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## வெளிநாடுகளில் விடுதலை இயக்கம்!

ஈழத் தமிழரின் விடுதலை இயக்கமாம் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது கிளைகளை வெளிநாடுகளில் நிறுவுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. 1982-ம் ஆண்டு ஜனவரிக்குமுன் இக்கிளைகள் நிறுவப்படும். மிக விரைவில் லண்டனில் கூட்டணிக் கிளைக்கான அலுவலகம் திறக்கப்படவிருப்பது தெரிந்ததே.

## இனவெறிக்கு எதிரான கருத்தரங்கு

ஐ. நா. பொதுச்சபையின் 35 வது பொதுக் கூட்டத்தீர்மானத்தின்படி இனவெறி எதிர்ப்புப் போராட்டங்களில் பத்திரிகை வானொலி மற்றும் செய்தித் தொடர்பு ஸ்தாபங்களின் சர்வதேசக் கருத்தரங் கொன்றை நடத்துவதற்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இத்தீர்மானத்திற் கமைய எதிர்வரும் யூன் மாதம் கிழக்கு பேர்லினில் கருத்தரங்கு நடைபெறவிருக்கின்றது. இதில் பல நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவிருக்கின்றார்கள்.

## பொலிஸ்காரர் கைது

இளவாலையைச் சேர்ந்த இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைகொள்ளை தொடர்பாக கொழும்பு விசேட பொலிசார் கைது செய்து கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவரின் வீட்டில் உள்ள ஏனையோர் இம்சிக்கப்பட்டதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## தேரோவுக்கு வெளியேற்ற உத்தரவு

காஞ்சி விகாரையைச் சேர்ந்த வண. பீ. விமலஞான தேரோவிற்கு 48 மணித்தியாலத்திற்குள் நாட்டைவிட்டு வெளி ஏற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பதினெட்டு வருடம் இந்தியாவில் தங்கி இருக்க வைத்திருந்த விசா 1981 மர்ச்சு 17 திகதியுடன் காலாவதியானதால் இந்த நிலை ஏற்பட்டது. இதனை எதிர்த்து அவர் றிட் மனு தாக்கல் செய்துளார்.

## இளவாலையில் இருவர் மர்மமறைவு

இளவாலையைச் சேர்ந்த இருவரை ஞாயிறு காலை இராணுவம் எனக் கூறி சிலர் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். இதனை அறிந்த உறவினர் அப்பகுதி இராணுவத்திடம் தொடர்பு கொண்டபோதுவிசாரணைக்குயாரையும் அனுப்பவில்லை என்றனர். பொலிசாரும் அழைத்து வரவில்லை எனக் கைவிரித்து விட்டன. இதனால் எதிர்கட்சி முதல்வர் திரு. அமிர்தலிங்கம் அவர்களின் கவனத்திற்கு இதுகொண்டு வரப்பட்டுள்ளது.

## கைது

நீர்வேலிக் கொள்ளை தொடர்பாக தேடப்பட்ட சிவபாதம் என்ற நபர் மல்லாகம் கல்வி நிலையத்தில் மறைந்திருப்பதாக தகவல் கிடைத்ததாம், அங்கு சென்று சோதனை நடத்திவிட்டு. அந்த ரியூட்டரி உரிமையாளரான பொன்னுத்துரை சிறிஜீவகன் என்பவரைப் பொலிசார் கைதுசெய்துள்ளார்கள்.

எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் சகலவிதமான, உள்ளூர் உற்பத்திப்பொருட்களும் சாப்பாட்டுச்சாமான்களும் பெற்றுக்கொள்ளலாம்.

நியூ சாரதா ஸ்ரோர்ஸ்

32 செண். ஜோன்ஸ் வீதி.
கொழும்பு 11

உதயசூரியன் ஒளி, திக்கெட்டும்பரவ எமது நல்லாசிகள்

எஸ். எஸ். வில்சன் அன் கோ

176, 4ம் குறுக்குத்தெரு,
கொழும்பு

எங்களிடம் அரிசி, வெண்காயம், மிளகாய், கிழங்கு ஏனைய உள்ளூர் உற்பத்திப்பொருட்கள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். எஸ். சண்முகம் அன் கோ

200, பிறின்ஸ் ஸ்றீற்
கொழும்பு 11

இப்பத்திரிகை 'உதயசூரியன்' வெளியீட்டகத்தால் தயாரிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினரால் 1981-ம் ஆண்டு மே மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org